# மனித உரிமைகள் மீட்பு

ஒதுக்கிவிட மாட்டோம்! ஒதுங்கிவிட மாட்டோம்!! மாதமிருமுறை இதழ்

உரிமை-2 மீட்பு-11 நவம்பர் 1-15,2018 விலை ₹ 10/-



## தஞ்சை பெரிய கோவிலுக்கு நீதி கிடைக்குமா?



சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின்
கோவை மாவட்ட தலைவர்
திருமதி. M. ஈஸ்வரி அவர்களின்
இல்ல திருமண விழா

தலைமை :

**S. லோகநாயகி**
சர்வதேச தலைவர்
சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்

**M. அப்துல் ரகுமான்**
நிறுவனர் - சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்



சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின்
மாநில, மாவட்ட நிர்வாகிகள்
அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு
மணமக்களை வாழ்த்தி, சிறப்பிக்க வேண்டுமாய்
அன்புடன் அழைக்கின்றோம்.

மணமக்கள்
**M. நவீன்குமார்**
**R. சௌந்தர்யா (எ) ரம்யா**

மணநாள் : 14-11-2018 புதன்கிழமை
இடம் : தென்றல் மஹால்
போத்தனூர், கோவை.

சர்வதேச மக்கள்
ஊழல் தடுப்பு இயக்கம்
கோவை மாவட்டம்.

DM WIMS

வயநாடு டி.எம்.விம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையும்
கூடலூர் பந்தலூர் ஒருங்கிணைந்த நீதிமன்றம்
மற்றும் வழக்கறிஞர்கள்
இணைந்து நடத்தும்

# மாபெரும் இலவச மருத்துவ முகாம்



வருகின்ற 11-11-2018 ஞாயிற்றுக்கிழமை அன்று
காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை
கூடலூர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற உள்ளதால்
பொதுமக்கள் அனைவரும் தவறாமல்
கலந்துகொண்டு, இவ்வரிய வாய்ப்பினை
பயன்படுத்தி இலவச மருத்துவ சிகிச்சை
பெற்றுக் கொள்ள வேண்டுமாய்
அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவண் : **R.அகிலேஷ்**
நீலகிரி மாவட்ட தலைவர்
சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்

# மனித உரிமைகள் மீட்பு


உரிமை: 2 நவம்பர் 1-15,2018 மீட்பு : 11

வெளியீட்டாளர் : **M. அப்துல் ரகுமான்**
ஆசிரியர் : கோவை **S. லோகநாயகி**
**இணை ஆசிரியர்கள் :**
C.J. சுதர்மன், S.G.M. ரமேஷ்,
A. பிரபாகரன், N. அன்பழகன்,
**முதன்மை ஆசிரியர் :** K. மதுசூதனன்
**நிர்வாக ஆசிரியர் :** G. வெங்கடேசன்
**தலைமை செய்தி ஆசிரியர் :** M. ராமசந்திரன்
**பொறுப்பு ஆசிரியர் :** R. சரவணன்
**பொறுப்பு இணை ஆசிரியர் :** Dr.A.K. குமரவேல்
**கௌரவ ஆசிரியர் :** Dr. S.ஆயிஷா
**கௌரவ செய்தி ஆசிரியர் :**
புதுவை K. ராஜாராம்குமார்
**முதன்மை துணை ஆசிரியர் :** S.கலைவாணி
**பொறுப்பு இணை ஆசிரியர் :** R. அகிலேஷ்
**தலைமை ஆசிரியர் :** S. காசிம் முகம்மது
**தலைமை இணை ஆசிரியர் :** V.P. சேகர்ஜோதி
**தலைமை கௌரவ ஆசிரியர் :** K. ராக்கிமுத்து
**செய்தி ஆசிரியர் :** S. அருள்செலின் மேரி
**செய்தி துணை ஆசிரியர் :** A. விஜி
**செய்தி இணை ஆசிரியர் :**
S.A. செய்யது முஹைதீன் ஆலிம்சாகிப்
**தொகுப்பாசிரியர் :** S. ரமேஷ்
**தொகுப்பு இணை ஆசிரியர் :** P. முருகேசன்
**தொகுப்பு துணை ஆசிரியர் :** A. அருண்குமார்
**துணை ஆசிரியர்கள் :**
A.R. நாசர்கான், D. கென்னடி,
S.சிவா, M.R.நதிம், S.முகமது ஷரீப்
**கௌரவ துணை ஆசிரியர்கள் :** J.தாஹிர்,
கலிமா நிஜாமுதீன், S. ரவிக்குமார்,
A.R.R. கௌதம் கிருஷ்ணா. M. தனராஜ்,
சி.வீரமணி, K. தம்புசாமி, R. தமிழ்செல்வன்,
P.V.கிருஷ்ணமூர்த்தி, M. ஜமாலுதீன்
D. சுரேஷ்குமார்
**உதவி ஆசிரியர் குழு :** C. ஞானசேகரன்,
P. ராமமூர்த்தி, M.S. ஆரோக்கியசாமி,
C. பெருமாள், A. பார்த்திபன்,
K. கிருஷ்ணமூர்த்தி, M.விஜயேந்திரன்,
**முதன்மை நிருபர்கள் :**
L.S. மனோகரன், J. குர்சித் ஆலம்கான்,
S.முரளிதரன், S.சல்மான்அகமது, M.அகில்
**நிருபர்கள் :** A.செய்யது இப்ராகிம், M.ஈஸ்வரி,
K.முரளி, M.ராஜாமணி, D.கோபிநாத்,
T. அப்துல் ரஜாக், ஹாரீஸ் அகமது,
A. பார்த்திபன், M.இளவரசன், T.சுதாகர், D.G.தினகரன்,
R. பொன்னுசாமி, S.அறிவழகன், K.சக்திவேல்,
**புகைப்பட நிருபர்கள் :**
M.ஆனந்தி, சு.மதிவிழி, S. பிரமலேதா
**சட்ட ஆலோசகர்கள்**
V.T. சின்னராஜ் **B.A.,B.L.**, சிவக்குமார் **L.L.B.**,
S. பாலமுருகன் **B.A.,B.L.**, K. மகாலட்சுமி **B.A.,B.L.**,



இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும்
முகவரி : **ஆசிரியர்**
**மனித உரிமைகள் மீட்பு** (மாதமிருமுறை இதழ்)
61, வெங்கட மேஸ்திரி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001. Cell : 95434 10000
Email : humanrightswatch2018@gmail.com
website: www.internationalhumanrightswatch.org
twitter.com / worldhrw / facebook.com



எல்லா வழக்குகளும் சென்னையில் ள்ள உரிய நீதி மன்றங்களின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள், சிறப்புக் கட்டுரையாளர் களின் கருத்துகள் அவர்களின் சொந்தக் கருத்துகளே.



**வாக்கு வாங்கியாக மாறும் வட மாநிலத் தொழிலாளர்கள்** - 4
**வன்னியர் ஓட்டுகளை வளைக்கும் எடப்பாடி** - 6
**திரும்பிப் பார்க்க வைக்கும் கமல்!** - 8
**மருத்துவ சிகிச்சையில் பின்தங்கி இருக்கிறது இந்தியா!** - 10
**வாட்ஸ் அப் குழுவில் உளவு போலீஸ்** - 13
**தஞ்சை பெரிய கோவிலுக்கு நீதி கிடைக்குமா?** - 15
**சிக்கலில் சிக்கிய அமைச்சர் ஜெயக்குமார்** - 18
**இலங்கையில் தோண்டத் தோண்ட எலும்பு கூடுகள்** - 22
**மக்களை வஞ்சிக்கும் மத்திய, மாநில அரசுகள்** - 26
**காத்திருக்கும் ஆபத்து!** - 28
**மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் டிடெக்டிவ்** - 30
**ஓடும் ரயிலில் கொள்ளை !** - 36
**தமிழகத்தில் ஹைட்ரோகார்பன் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்** - 40
**உலகை அதிரவைத்த கஷோகி கொலை** - 43
**அதிகரிக்கும் மர்மக் காய்ச்சல்** - 46
**தயங்குவது ஏன்?** - 50





# வாக்கு வங்கியாக மாறும் வட மாநிலத் தொழிலாளர்கள் வாக்குரிமையை இழக்கும் தமிழக மக்கள்

**தி.மு.க. தலைவர்**

**மு.க.ஸ்டாலின்**

தமிழகத்தை ஒரு புதிய அபாயம் வளைத்துப் பிடிக்க ஆரம்பித்திருக்கிறது. இது இப்போது எழுந்ததில்லை. ரொம்ப காலமாகவே பேசி வருகிறார்கள். ஆனால் அதை யாருமே சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இது மிகவும் கவலைக்குரிய விஷயமாக தற்போது மாறி வருவதை அனைவரும் உணர ஆரம்பித்துள்ளனர். ஒரு திடீர் வாக்கு வங்கி தமிழகத்தில் உருவாகியுள்ளது. அது வேறு யாரும் அல்ல, வட மாநிலத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்தான்.

முன்பெல்லாம் நீண்ட காலத்திற்கு முன்பே இங்கு குடியேறிய வட மாநிலத்தவர் மட்டுமே இருந்து வந்தனர். சென்னையை எடுத்துக் கொண்டால் சௌகார்பேட்டை என்ற அளவில்தான் இவர்கள் இருந்தனர். ஆனால் இன்று தமிழகத்தில் தடுக்கி விழுந்தால் யாராவது பிகாரி மீதோ அல்லது உ.பி காரர் மீதோதான் விழ வேண்டி வரும். அந்த அளவுக்கு வட மாநிலத்தவர் பெருக்கம் அபரிமிதமாக அதிகரித்துப் போயுள்ளது.

வட மாநிலத்தவர் பெருக்கம் என்பது ஆரம்பத்தில் மிக மிக குறைவானதாகத்தான் இருந்தது. கட்டுமானத் தொழிலில் மெதுவாக நுழைந்தனர். அதேபோல ஹோட்டல் பணிகளிலும் நுழைந்தனர். இன்று இந்த இரண்டு தொழில்களிலும் இவர்கள் இல்லாத இடமே இல்லை. இன்று சாதாரண வேலைகளுக்கும் கூட வட மாநிலத்தவர்தான் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். டீக் கடைகளில் கூட இவர்களை வேலைக்கு வைக்க ஆரம்பித்து விட்டனர். பெட்ரோல் போடும் வேலையில் இவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

அதேபோல ஆந்திரா, கேரளாவைச் சேர்ந்தவர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். கட்டுமானத் தொழிலில் வட இந்தியர்கள் மிகப்பெரிய அளவில் ஊடுறுவி விட்டனர். சின்ன சின்ன வேலைகளிலும் கூட வட இந்தியர்களே அதிகம் உள்ளனர்.

மத்திய அரசுப் பணிகளிலும் அதிக அளவில் வட இந்தியர்கள் ஊடுறுவி வருகின்றனர். குறிப்பாக சென்னை வருமான வரித்துறை அலுவலகத்திற்குப் போனால் இந்தி பேசும் ஊழியர்களே அதிகம்.





இந்த நிலையில்தான் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஒரு அதிர்ச்சி அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதில் வட மாநிலத் தொழிலாளர்களை வாக்கு வங்கியாக மாற்றத் திட்டமிட்டு வருகிறாரகள். அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க சதி நடக்கிறது. திமுகவுக்கு ஆதரவான வாக்காளர்களை நீக்க முயல்கிறார்கள். சிறுபான்மையினர் வாக்குகளையும் காலி செய்ய திட்டமிடுகிறார்கள். திமுகவினர் உஷாராக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார் ஸ்டாலின்.

நீண்ட காலமாகவே ஒலித்து வந்த அபாய சங்குதான். தமிழ்த் தேசியம் பேசுவோர் தேவை யில்லாமல் இனவெறியைத் தூண்டுகிறார்கள் என்று அலட்சியப்படுத்தப்பட்ட உண்மையும் கூட. ஆனால் இந்த அபாயத்தை இப்போதுதான் அரசியல் கட்சியினர் உணர ஆரம்பித்துள்ளனர். இது நிச்சயம் தமிழகத்திற்கு மிகப் பெரிய சவாலாக மாறப் போவதையும் அனைவரும் உணர வேண்டும். தமிழகத்தின் முக்கியத் தொழில்களில் இன்று தமிழர்கள் இல்லை. மாறாக வட இந்தியர்கள் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

வட மாநில தொழிலாளர்கள் இங்கு பெருக தமிழர்களே முக்கியக் காரணம் என்றாலும் கூட இதை வைத்து குளிர் காய சில குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் காய் நகர்த்துவதாக சொல்கிறார்கள். திட்டமிட்டு வட மாநிலத்தவரை பெருமளவில் இங்கு குடியேற வைத்து அவர்களுக்கு ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை என எல்லாவற்றையும் கொடுத்து தங்களுக்கு சாதகமாக வாக்களிக்க வைக்கும் சதிச் செயலாக இது பார்க்கப்படுகிறது.

இதே நிலை நீடித்தால் நாளை பாண்டியன் மளிகைக் கடைக்குப் பதில் குப்தா ஸ்டோர்ஸ் அதிகரிக்கும் வாய்ப்புகளை மறுக்க முடியாது. வரும் தேர்தலில் உங்களுக்கு முன்னால் சர்மாவும், பின்னால் பானர்ஜியும் வாக்களிக்கக் காத்திருந்தால் அதிர்ச்சி அடையாதீர்கள்..

இது உண்மையிலேயே நடக்கத்தான் போகிறது, தமிழக மக்கள் உஷாராக இல்லாமல் போனால்.



**K. ராக்கிமுத்து**
*தலைமை கௌரவ ஆசிரியர்*

வன்னியர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை ஒரே கையெழுத்தில நிறைவேற்றி, ஒட்டுமொத்த வன்னியர் சமுதாய ஓட்டுக்களையும் வளைக்கும் முயற்சியில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, இறங்கியுள்ளதைக் கண்டு, தைலாபுரம் தோட்டம் அதிர்ச்சியில் உறைந்துள்ளதாம்!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வட மாவட்டங்களில் மெஜாரிட்டியாக இருப்பது வன்னியர் சமுதாயம். இப்பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகள், 15 நாடாளுமன்றத் தொகுதிகளின் வெற்றியை நிர்ணயிக்கும் வன்னியர் சமுதாயத்தின் ஒற்றைத் தலைமை தாங்கள்தான் என்று மார்தட்டி வருகிறது பா.ம.க.

# வன்னியர் ஓட்டுகளை வளைக்கும் எடப்பாடி அதிர்ச்சியில் ராமதாஸ்



ஆனால், இதை உடைக்கும் வகையில் முதல்வர் எடப்பாடி 3 அறிவுப்புகளை வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறார்.

இதுகுறித்து வன்னியர் சங்க நிர்வாகிகள் மத்தியில் பேசினோம். தமிழகம் முழுவதும் பள்ளி, கல்லூரி, திருமண மண்டபங்கள் என சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வன்னியர்களின் சொத்துக்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன. அவற்றை மீட்க வேண்டும். ராமசாமி படையாட்சியாரின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும். அவருக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும் ஆகிய மூன்று கோரிக்கைகளை நாங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம்.

ஆனால், இவற்றை கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசும், ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அரசும் புறந்தள்ளியே வந்தன. இந்த நிலையில், முதல்வர் எடப்பாடியார் மட்டும் மேற்கண்ட மூன்று கோரிக்கையும் தைரியாமாக செய்து முடித்திருக்கிறார். இதற்காக அவருக்கு பிரமாண்ட பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்துள்ளோம் என்றார்கள்.

பாராட்டு விழாவை ஏற்பாடு செய்துவரும் வன்னியர் அமைப்புகளில் ஒன்றான படையாட்சியார் பேரவைத் தலைவர் பெரோஸ் காந்தியிடம் பேசினோம். ராமசாமி படையாட்சியார் மறைந்த பிறகு அவரது புகழை வெளிக்கொண்டு வரும் வகையில், 1991 முதல் 1996 வரையிலான அ.தி.மு.க ஆட்சியின்போது அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, விழுப்புரம் மாவட்டத்துக்கு ராமசாமி படையாட்சி மாவட்டம் எனப் பெயர் மாற்றினார். அதன்பிறகு பல்வேறு காரணங்களால், அந்தப் பெயரை கருணாநிதி மாற்றினார். ஜெயலலிதாவைப் போன்று அவர் வழி



வந்த முதல்வர் எடப்பாடி பழனிசாமி அரசு, எங்களது பிரதான கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்து எங்களை மகிசேச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது. கடந்த செப்டம்பர் 16-ம் தேதி ராமசாமி படையாட்சியாரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக கொண்டாடியது தமிழக அரசு. அதேபோல், படையாட்சியாருக்கு கடலூர் மஞ்சக்குப்பத்தில் மணி மண்டபம் கட்ட அறிவிப்பு வெளியிட்டதோடு, அப்பணிக்கு கடந்த மாதமே காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார் முதல்வர் எடப்பாடி பழனிசாமி.

இவ்வாறு கேட்ட உடனேயே செய்து கொடுத்த முதல்வர் எடப்பாடி செய்து கொடுத்த முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கும், இதற்கு உறுதுணையாக இருந்த துணை முதல்வர் ஓ.பி.எஸ். மற்றும் அமைச்சர்கள் சி.வி.சண்முகம், கே.பி.அன்பழகன், எம்.சி.சம்பத். கே.சி.வீரமணி, துரைக்கண்ணு ஆகியோருக்கும் பாராட்டுத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். அதன்படி, அக்டோபர் 28-ம் தேதி சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் பாராட்டு விழா நடைபெற இருக்கிறது. இதில் சுமார் 50-க்கும் மேற்பட்ட வன்னியர் சங்க நிர்வாகிகள் பங்கேற்க இருக்கிறோம். இதனால் வன்னியர் வாக்குகள் இனி சிதறாமல் அ.தி.மு.கவுக்குக் கிடைக்கும் என்றார்.

முதல்வரின் இந்த நடவடிக்கை உங்கள் பார்வையில் எப்படி இருக்கிறது? அரசியல் விமர்சகர் ரவீந்திரன் துரைசாமியிடம் கேட்டோம். கவுண்டர் சமுதாயத்தினர் அதிகம் வசிக்கும் கொங்கு மண்டத்தில் ஏற்கனவே அ.தி.மு.கவுக்கு அபரிமிதமான செல்வாக்கு உள்ளது. இரண்டாம் இடத்துக்குத்தான் தி.மு.க போட்டியிடுகிறது. அதேபோல, வடமாவட்டங்களில் வன்னியர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள், இவர்களது ஒட்டுமொத்த ஓட்டுகளையும் அ.தி.முக.வின் வாக்கு வங்கியாக மாற்றும் ராஜதந்திர முயற்சிதான் இது.

ராமசாமி படையாட்சியாரின் இமேஜை வளர்க்க எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, கருணாநிதி என யாரும் விரும்பவில்லை. ஒவ்வொரு புதிய தலைவரும் தனக்கென சமூகப் பின்புலம் வளர்ப்பது இயல்பு. அண்ணாவின் பாணியில் இருந்து கருணாநிதியின் பாணி வேறு மாதிரியாக இருந்தது, அதேபோல், எம்.ஜி.ஆர். பாணியில் இருந்து ஜெயலலிதா பாணி வேறாக இருந்தது. அப்படியே ஜெ. பாணியில் இருந்து முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் பாணி முற்றிலும் வேறாக உள்ளது.

தனஞ்சய முத்தரையர் மன்னன் ஆண்டதால்தான் தஞ்சை எனப் பெயர் வந்தது என தஞ்சை மண்ணில் பேசினார் எடப்பாடி. எஸ்.சி., எஸ்.டி, உத்தரவு குறித்து ரிவியூ பெட்டின் போடுகிறார். மேலும், சிவந்தி ஆதித்தனார் மணிமண்டப பணியை மேற்கொள்கிறார். இவ்வாறு தான் சார்ந்த ஜாதி மட்டுமின்றி அனைத்து சமுதாயத்தினரையும் ஒருங்கிணைத்துச் செல்கிறார் முதல்வர் எடப்பாடி என்றார்.

ராமசாமி படையாட்சியாரின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்து, அவரது சிலைக்கு மாலை அணிவித்து முதல்வர் பழனிசாமி மரியாதை செலுத்திய அதே நாளில், தைலாபுரம் தோட்டத்தில் காடுவெட்டி குருவின் சிலையைத் திறந்து வைத்தார் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ். 2014 நாடாளுமன்றத் தேர்தலில்கூட தர்மபுரியில் ஜாதி செல்வாக்கை வைத்துத்தான் அன்புமணி வெற்றி பெற்றார். அப்படிப்பட்ட நிலையில், தற்போது தனக்கென இருக்கும் ஒரே வாய்ப்பையும் முதல்வர் எடப்பாடியார் தட்டிப்பறித்து, அடிமடியிலேயே கை வைத்திருப்பதால் கடும் அதிர்ச்சியில் இருக்கிறாராம் ராமதாஸ்.



**A. அருண்குமார்**
*தொகுப்பு துணை ஆசிரியர்*



# திரும்பிப் பார்க்க வைக்கும் கமலின் செயல்பாடுகள்

கமல்ஹாசன் மேற்கொண்டு வரும் சூறாவளி சுற்றுப்பயணங்களுக்கு மக்கள் கூட்டம் கூட்டமாக திரண்டு வருவதை அரசியல் கட்சிகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன. அரசியல்வாதிகளின் மக்கள் விரோத செயல்களால் பல்வேறு நடிகர்கள் கட்சி தொடங்க ஆரம்பித்துள்ளனர். இதில் யாரும் எதிர்பாராமல் அரசியலில் குதித்தவர் கமல்தான்.



கட்சி தொடங்கிய கையோடு சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களை சந்தித்து வருபவர் கமல்ஹாசன். இவரது சுற்றுப் பயணங்களில் பெரும்பாலும் மக்கள் நல திட்டங்களையே முன்னெடுத்து பேசி வருகிறார்.

கமல் கட்சி 2 அல்லது 3 அமாவாசைக்குள் காணாமல் போய்விடும் என்று தமிழக அமைச்சர்கள் விமர்சனம் செய்தனர். எனினும் அதுகுறித்து கவலைப்படாமல் கமல் தனது பணியை செவ்வனே செய்து வருகிறார்.

அதிமுக, திமுகவை தாண்டி தமிழக மக்கள் ஏதாவது ஒரு மாற்றம் வேண்டும் என்று எதிர்பார்ப்பது கமலின் பிரசார கூட்டங்களுக்கு கூட்டம் கூட்டமாக மக்கள் வருவதை பார்த்தாலே கண்கூடாக தெரிகிறது. கமல் தேர்தலில் வெற்றி பெறுவாரா என்பது இரண்டாம்பட்சம்தான். ஆனாலும் அவரது பேச்சை கேட்க மக்கள் கூடுகின்றனர் என்பதுதான் விஷயம்.

அவரது செயல்பாடுகளை அனைவரையும் திரும்பி பார்க்க வைப்பதற்கான முழு காரணம் மற்ற அரசியல்வாதியை போல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களை தேடி வராமல் முன்கூட்டியே அந்த தொகுதிகளில் மக்களின் குறைகள் என்ன, எந்த திட்டங்களை அவர்கள் காலம் காலமாக எதிர்நோக்கியுள்ளனர் என்பதை பட்டியலிட்டு வருகிறார் கமல். இதுதான் அவர் செல்லும் இடங்களில் மக்கள் கூட்டத்தை சேர்த்து வருகிறது.

மேலும் எந்த ஒரு அரசியல்வாதியும் முன்னெடுக்காத கிராம சபை என்ற விஷயத்தை வற்புறுத்திவருகிறார் கமல். அதுவும் எங்கிருந்து குடவோலை முறை முதல் முறையாக கொண்டு வரப்பட்ட உத்தரமேரூரில் இருந்து... கிராம சபை கூட்டங்களை நடத்தினால்தான் மக்கள் குறைகள் என்னவென்று அதிகாரிகளுக்கு தெரியவரும்.

தமிழக அரசுக்கு எதிராக அவ்வப்போது அச்சமின்றி தன் தரப்பு கருத்துகளையும் முன்னெடுத்து வருகிறார். அதிமுகவுடன் கூட்டணிக்கு கமல் செல்லமாட்டார் என்பது அனைவரும் அறிந்ததே. அதுபோல் திமுகவுடன் கூட்டணி இல்லை என்று நேரலை நிகழ்ச்சியில் மக்கள் முன்பே சொல்லிவிட்டார்.

எனவே பதவி, பணத்துக்காக மற்ற கட்சிகளுடன் கூட்டணி வைக்காமல் மக்கள் நலனை கருத்தில் கொண்டு கமல் செயல்பட்டால் மக்கள் மனதில் இடம் உண்டு, இல்லாவிட்டால் அவரது கட்சியும் விஜயகாந்த் கட்சி போல் மாறிவிடும் என்பதில் சந்தேகமே இல்லை.

அரசியல் ஆதாயத்துக்காக மற்ற கட்சிகளை மாறி மாறி குறை கூறும் போக்கை கடைப்பிடிக்காமல் தான் என்ன செய்வேன் என்பதை மட்டும் கமல் பேசுவதோடு வெற்றி பெறாவிட்டால் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதே சால சிறந்தது.



**S. காசிம் முகம்மது**
*தலைமை ஆசிரியர்*



# மருத்துவ சிகிச்சையில் பின்தங்கி இருக்கிறது இந்தியா!



இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமும், இந்திய பொது சுகாதாரக் கழகமும், மருத்துவ நிபுணர்கள், முக்கியமான மருத்துவ நிறுவனங்கள், மாநில மக்கள் நல்வாழ்வு அமைச்சகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய ஆய்வு முடிவு, பல அதிர்ச்சித் தகவல்களை வெளிப்படுத்தியிருக்கிறது.

லான்செட்' என்கிற மருத்துவ இதழில் வெளியாகியிருக்கும் இந்த முடிவு, இந்தியா எந்த அளவுக்கு மருத்துவ சிகிச்சையில் பின்தங்கி இருக்கிறது என்பதையும், பல்வேறு நோய்களின் பாதிப்பு எந்த அளவுக்கு தீவிர மடைந்திருக்கிறது என்பதையும் வெளிச்சம் போடுகிறது.

இதய நோய்களும், பக்கவாதத் தாக்குதல்களும் கடந்த *25* ஆண்டுகளில் எல்லா மாநிலங்களிலும் 50% அதிகரித்திருக்கின்றன. இதய நோய்களில் முதலிடத்தில் பஞ்சாப்பும், அதைத் தொடர்ந்து தமிழ்நாடும் காணப்படுகின்றன என்றால், சர்க்கரை நோயைப் பொருத்தவரை தமிழகம் முதலிடத்திலும் பஞ்சாப் இரண்டாம் இடத்திலும் காணப்படுகின்றன. பக்கவாதத் தாக்குதல்களைப் பொருத்தவரை மேற்கு வங்கம் முதலிடத்திலும் ஒடிஸா அடுத்த இடத்திலும் காணப்படுகின்றன. புற்றுநோய் தாக்குதலில் கேரளம் முதலிடத்திலும், அதைத்தொடர்ந்து அஸ்ஸாமும் இருப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது.

*1990*-லிருந்து *2016* வரையிலான *26* ஆண்டுகளில் *2.6* கோடியாக இருந்த சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை *6.5* கோடியாக அதிகரித்திருக்கிறது. நுரையீரல் தொடர்பான சுவாச நோயாளிகளின் எண்ணிக்கை *2.8* கோடியிலிருந்து *5.5* கோடியாக அதிகரித்திருக்கிறது.

இந்தியாவில் அதிகமான மரணத்திற்குக் காரணம் புற்று நோய் அல்ல, இதய நோய்கள் தான் என்று தெரியவந்திருக்கிறது. *2016*-இல் மட்டும் *2.8* கோடி பேர் இதய நோயால் இறந்திருக்கிறார்கள். அதற்குக் காரணம், அவர்களது உணவு முறையும், அதிக ரத்த அழுத்தமும்தான் என்று குறிப்பிடுகிறது அந்த அறிக்கை. இவை இரண்டுக்குமே காரணம், மாறிவிட்ட வாழ்க்கை முறையும், அதிகக் கொழுப்புச் சத்துள்ள உணவுகளும்தான் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

*1990*-இல் *5.5* லட்சமாக இருந்த புற்று நோய் மரணம், கடந்த கால் நூற்றாண்டில் *10.6* லட்சமாக அதிகரித்திருக்கிறது. மக்கள்தொகைப் பெருக்கத்தையும் மரணமடைந்தவர்களின் வயதையும் வைத்துப் பார்க்கும்போது இதய நோய், நுரையீரல் தொடர்பான பிரச்னைகள் அளவுக்கு புற்று நோய் அதிகரித்துவிடவில்லை என்பது ஆறுதல்.

புற்று நோயைப் பொருத்தவரை அதிக அளவிலான பாதிப்பு குடல் பகுதியில் காணப் படுவதாகவும், ஈரல் புற்று நோய் அதிகரித்து வருவதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தி யிருக்கிறது.

புற்று நோயைப் பொருத்தவரை, கர்ப்பப் பை புற்று நோய் மட்டும்தான் கவலையளிக் கும் விதத்தில் அதிகரித்திருக்கிறது. கண்டறியப் பட்டிருக்கும் 28 விதமான புற்று நோய்களில் ஈரல் புற்று நோய்தான் அதிக அளவில் காணப் படுகிறது. கடந்த 25 ஆண்டுகளில் குடல் புற்று நோய் 206% அதிகரித்திருக்கிறது.

மார்பகப் புற்று நோய், நுரையீரல் புற்று நோய், உதடு, நாக்கு, வாய் புற்று நோய் உள்ளிட் டவை குறிப்பிடத்தக்க அளவில் காணப்படு கின்றன. புற்று நோய் மரணங்கள் அதிக அளவில் காணப்படுவதற்கு ஆரம்ப காலத்திலேயே கண்டறியாமை, சிகிச்சை பெறாமை, அதற்கான வசதியின்மை ஆகியவைதான் காரணம் என்று அந்த அறிக்கை தெளிவுபடுத்துகிறது.



இந்தியாவில் மிகவும் கவலையளிக்கும் நோயாக காட்சி அளிப்பது சர்க்கரை நோய்தான் என்று தெரிகிறது. குறிப்பாக தமிழ்நாடு, கேரளம், தில்லி ஆகிய பகுதிகள் மிக அதிகமாக சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு இரண்டு காரணிகள் குறிப்பிடப்படுகின்றன.

முதலாவது, கார்போஹைட்ரேட் சார்ந்த உணவுப் பழக்கம். இரண்டாவது காரணம், உணவுப் பழக்கத்திலும் ஓய்வெடுப்பதிலும் ஒழுங்கின்மையும், போதுமான உடற்பயிற்சி இல்லாமையும். சர்க்கரை நோய் குறித்தான விழிப்புணர்வு பள்ளிக்கூடங்களிலிருந்தே தொடங்கப்பட்டால்தான் வருங்காலத்தில் ஆரோக்கியமான தலைமுறையை நாம் காண முடியும் என்கிறது அந்த அறிக்கை.

15 முதல் 35 வரையிலான வயதினர் மத்தியில் மரணத்திற்கான மிக முக்கியமான காரணம் தற்கொலை என்கிறது லான்செட்' மருத்துவ இதழ். உலகளாவிய அளவில் பெண்கள் மத்தி யிலான தற்கொலையில் 34% இந்தியாவில்தான் நிகழ்கின்றன. உலக சராசரியில் பெண்களின் தற்கொலை இந்தியாவில் இரண்டு மடங்கு.

மகளிர் தற்கொலையில் முதலிடத்தில் தமிழகமும், கடைசி இடத்தில் நாகாலாந்தும் காணப்படுகின்றன.

2016-இல் மட்டும் இந்தியாவில் 2,30,314 தற்கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. 1990-இல் இறந்தவர்களில் 25.3% மகளிரும், 18.7% ஆண்களும் தற்கொலையால் இறந்தார்கள் என்றால், 2016-இல் 36.6% பெண்களும், 24.3% ஆண்களும் தற்கொலையால் இறந்தார்கள் என்கிறது அந்த அறிக்கை. கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் முதியோர் மத்தியிலான தற்கொலையின் எண்ணிக்கையும் அதிகரித் திருக்கிறது.

இந்த ஆய்வு வெளிப்படுத்தியிருக்கும் தகவல்களும் புள்ளிவிவரங்களும் கடந்த சுதந்திர தினத்தன்று பிரதமரால் அறிவிக்கப்பட்டிருக்கும் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கியா அபியான்' (பிரதம மந்திரி மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்) செயல்படுத்தப்படுவதற்கு உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இதுபோன்ற ஆய்வுகள் தேசிய அளவில் நடத்தப்படுவது போல மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஆண்டு தோறும் நடத்தப் பட்டு அந்த ஆய்வுகளின் அடிப்படையில் அரசு போதிய நடவடிக்கைகளை மேற்கொண் டால், நோய்களின் பாதிப்பால் ஏற்படும் மரணம் பெருமளவில் குறைக்கப்படும்.



**Dr. S. ஆயிஷா**
கௌரவ ஆசிரியர்




# போர்க்களமான சபரிமலை

ஆண்டுதோறும் ஐயப்பனைக் காண சபரிமலைக்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களால் கேரளாவே குலுங்கும். ஆனால் இந்த ஆண்டு, அடிதடி ரகளையால் கேரளா பதட்டமாகியிருக்கிறது. காரணம், அனைத்துப் பெண்களையும் ஐயப்பன் கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் அதிரடி உத்தரவு.

இதற்கு விதை போட்டது கன்னட நடிகை ஜெயமாலா. ஐயப்பன் கோயிலில் எந்தப் பணிகள் செய்தாலும் தேவபிரசன்னம் பார்ப்பது வழக்கம். அப்படி 2006-ம் ஆண்டு பணிக்கர் ஒருவரைக் கொண்டு தேவபிரசன்னம் பார்க்கப்பட்டபோது, கோயிலுக்குள் பெண்ணொருவர் நுழைந்து விட்டார். அதனால் பரிகார பூஜைகள் நடத்தப்பட வேண்டும் என்றார். பணிக்கரின் வார்த்தைகளை தந்திரி குடும்பம் நம்ப முடியாமல் விழித்துக் கொண்டிருந்த போதுதான் நடிகை ஜெயமாலா, சபரிமலை கோயில் நிர்வாகத்துக்கு ஒரு கடிதத்தை பேக்ஸ் அனுப்பினார். அதில் 18 வருடங்களுக்கு முன்பு சபரிமலையில் தரிசனம் செய்தது நான்தான் எனவும், மூலவர் விக்ரகத்தைத் தொட்டேன். அப்போது எனக்கு வயது 27 என்றும் தெரிவித்து அதிர வைத்தார்.

அதிலிருந்தே சபரிமலை சர்ச்சைக்குள்ளானது. செப்டம்பர் 28-ம் தேதியன்று வழங்கிய உச்ச நீதிமன்ற தீர்ப்பால் ஐயப்ப பக்தர்கள் கொந்தளித்தனர். பந்தளம் ராஜ குடும்பம், தந்திரிகள், இந்து அமைப்புகள், கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், கேரளாவை ஆளும் கம்யூனிஸ்ட் முதல்வர் பினராயி விஜயன், உச்ச நீதிமன்ற உத்தரவை அமல்படுத்துவோம். சபரிமலைக்கு நம்பிக்கையோடு வரும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு அளிப்போம்! என அறிவித்தார். மறு சீராய்வு மனு போடச் சொல்லி கேரளா ஆளும் அரசை வலியுறுத்தி கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலும் பேராட்டங்கள் வெடித்தன.

இதனிடையே நடை திறக்கப்போவதாக திருவிதாங்கூர் தேவஸம் போர்டு அறிவிக்க, 16-ம் தேதி சபரிமலையை நோக்கி கேரளா அரசு பஸ்ஸில் சென்ற தமிழ்நோட்டு தம்பதியர் வலுக்கட்டாயமாக இறக்கி விடப்பட்டனர். சேர்த்தலையைச் சேர்ந்த லிபி என்பவர் சபரிமலைக்குச் செல்வதற்காக பந்தனம்திட்டை பஸ் ஸ்டாண்டுக்கு வந்தபோது ஊர்மக்கள் சுற்றி வளைத்து தடுத்தனர். ஒரு கட்டத்தில் பொதுமக்கள் அவரைத் தாக்க முயற்சிக்கவே போலீசார் லிபியை பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். ஆந்திராவில் இருந்து வந்த 45 வயது மாதவி தன் குடும்பத்தினருடன் பம்பையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தாண்டி ஐயப்பன் சன்னதி

அருகே வந்தார். அவரை பேராட்டக்காரர்கள் சுற்றி வளைத்து மிரட்டவே, பாதியில் திரும்ப வேண்டியதாயிற்று. முன்னாள் தேவஸம் போர்டு தலைவர் பிரயார் கோபால கிருஷ்ணன், பெண்களை சபரிமலைக்கு அனுமதித்தால் உயிரை விடுவேன் என மிரட்டல் விடுத்து சபரிமலைக்குச் சென்றவரை போலீசார் கைது செய்தனர். நிலக்கல்லில் பத்திரிக்கையாளர்கள் வந்த கார் அடித்து நொறுக்கப்பட்டது.

நடைதிறப்பை முன்னிட்டு பகல் முழுவதும் பல்வேறு பிரச்சனைகள் பல நடந்த நிலையில் 16-ம் தேதி மாலை 5 மணி அளவில் சபரிமலை சன்னதி திறக்கப்பட்டது. இரவு 10 மணி அளவில் ஹரிவராசனம் பாடி நடை அடைக்கப்பட்டது. மக்களுக்கு சோதனை வந்தால் சாமி பார்த்துக்கொள்ளும் இப்பொழுது சாமிக்கு பிரச்சனை வந்ததால் யாரு பார்த்துக்கொள்வார்?



**M. அகில்**
*முதன்மை நிருபர்*

ஜல்லிக்கட்டு மற்றும் ஸ்டெர்லைட் போராட்டத்தில் உளவுத் துறையின் தோல்வி கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அதனால், தமிழகத்தில் இனி எந்தப் போராட்டமும் விஸ்வரூபமாக எழுந்துவிடக் கூடாது என்பதில் தமிழக அரசும், தமிழக காவல்துறையும் தெளிவாக உள்ளது. இதற்கான உருவாக்கப்பட்டுள்ளது, ஆபரேன் சைபர் வைரஸ். இந்த ஆபரேனின் முக்கிய கட்டமாக, அரசியல் கட்சிகள், போராடும் இயக்கங்கள், அரசு ஊழியர் சங்கங்கள், தொழிலாளர் அமைப்புகள், மாணவர் இயக்கங்கள் என்று சகட்டுமேனிக்கு அனைத்து வாட்ஸ் அப் குழுவுக்குள்ளும் ஊடுருவி இருக்கிறது, உளவுப்பிரிவு போலீஸ்.




# வாட்ஸ் அப் குழுவில் உளவு போலீஸ்!

அரசைப் பற்றியும் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்களைப் பற்றி வாட்ஸ் அப்களில் உதிர்க்கப்படும் தகவல்கள், போராட்டம் குறித்து எடுக்கப்படும் அடுத்தகட்ட முடிவுகளை உடனுக்குடன் மேலிடத்துக்கு அப்டேட் செய்து வருகிறார்கள். வாட்ஸ் அப் மூலம் போராட்டம் பற்றிய தகவல் முழுமையாகத் தெரிந்துவிடுவதால், அதனை முடக்கும் பணியை காவல் துறை துல்லியமாக முடித்து விடுகிறது.

இதற்குத் தெளிவான உதாரணம்தான், சமீபத்தில் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தியது.

அதாவது, அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அரசுக்கு எதிராக மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்த வரிந்து கட்டி திட்டமிட்டனர். ஆனால், அவர்களின் ஒவ்வொரு அசைவையும் பக்காவாக வாட்ச் செய்த உளவுப்பிரிவு போலீஸார், இதுகுறித்து தொடர்புடைய துறை அமைச்சரவைகளின் கவனத்துக்கு உடனுக்குடன் கொண்டு சென்றனர். அவர்களும் தீவிரமாக போராட்டத்தில் ஈடுபடும் நபர்களைக் கண்டுபிடித்து, போராட்டம் நடைபெறாமல் தடுத்து விட்டனர். இதனால் நொந்து போன சங்க நிர்வாகிகள் எப்படி இந்த விவகாரம் வெளியில் தெரிந்தது, யார் போட்டுக் கொடுத்தது? என்று புலம்பியபடியே, யதேச்சையாக தங்கள் வாட்ஸ் அப் குரூப் மெம்பர்கள் லிஸ்டை ஸ்கேன் செய்தபோது, தங்கள் துறை சாராத இரண்டு நபர்கள் இருப்பதைக் கண்டுபிடித்தனர். அவர்கள் யார் என்று ஆராய்ந்தபோது உளவுத்துறை போலீஸ் என்பது தெரிய வந்தது. உடனடியாக அவர்கள் இருவரையும் குரூப்பிலிருந்து ரிமூவ் செய்து விட்டார்கள்.

ஆனால், அதற்குப் பிறகும் ரகசியங்கள் வெளியே கசியத்தான் செய்கிறது. அதற்குக் காரணம், ஊழியர்கள் பெயர்களிலும் உளவு போலீஸ் உலவுவதுதான். குழுவில் நுழைவதற்கும் சில நபர்களைக் கவனித்து,



அட்மின் மூலம் நுழைந்து விடுகிறார்கள்.

இந்த வாட்ஸ் அப் பதுங்கலின் மூலம் கடந்த சில மாதங்களாக அரசும் போலீசும் அடக்கி அமுக்கிய போராட்டங்களும் எழுச்சி ஆர்ப்பாட்டங்களும் எக்கச் சக்க மென்று சொல்லப்படுகிறது.

உளவுப்பிரிவு போலீஸார் குரூப்பினுள் இருந்துகொண்டு முடிந்த மட்டுக்கும் சங்கங்களை உடைத்து, பிரிப்பதையே முக்கிய ஆபரேனாகவே செய்திருக்கின்றனர். இந்த முயற்சி பெரிய அளவில் கைகொடுப்பதால், இப்போது தி.மு.க., காங்கிரஸ், பா.ஜ.க. கமலின் மக்கள் நீதி மய்யம், ரஜினியின் மக்கள் மன்றம் என சகல கட்சிகளின் உயர்மட்ட வாட்ஸ் அப் குழுவுக்குள்ளும் ஊடுருவி இருக்கிறது உளவு போலீஸ்.

மிக முக்கியமாக தினகரனின் அ.ம.மு.கவின் கிளை லெவல் நிர்வாகிகளின் குழு தொடங்கி, மாநில மேல்மட்ட நிர்வாகிகளின் குரூப் வரையில் பாதுகாப்பாக சங்கமமாகி இருக்கிறார்களாம். மேலும், ரஜினி மன்ற நிர்வாகிகளைத் தூண்டிவிட்டு கலகம் விளைவிப்பதிலும் உளவுத் துறையின் கை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

முன்பு எதிர்க்கட்சிகளின் தகவல்களைத் தெரிந்து கொள்ள போனை ஒட்டுக்கேட்க வேண்டியிருந்தது. ஆனால் இப்போது, எதிர்க் கட்சிக்குள் என்ன நடக்கிறது என்பதை ஆடாமல், அலுங்காமல் இருந்த இடத்தில் இருந்தபடியே தெரிந்துகொள்வதோடு, அதன் ஒற்றுமையை உடைத்து வீக் செய்யும் வேலையையும் மிக அழகாகச் செய்து கொண்டிருக்கிறது அரசும் உளவு போலீசும். ஒவ்வொரு குழுவிலும் நூறு, நூற்றைம்பது என்று மெம்பர்கள் இருப்பதால் கண்டுபிடித்துக் களையெடுப்பது கடினம். ஒன்றிலிருந்து வெளியேற்றப்பட்டால் இன்னொன்றில் இணைவதும், தங்களுக்கு தோதான அட்மின்கள் மூலம் விவாதங்களின் சாஃப்ட் காப்பியை அப்படியே பெற்றுக்கொள்வதுமாக டெக்னாலஜியை தெளிவாகப் பயன்படுத்தி அரசுக்கு உளவு போலீஸ் கைகொடுக்கிறது.

தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தன் மாவட்டச் செயலாளர்களுக்காக நடத்தி வரும் வாட்ஸ் அப் குரூப்பில் நிகழும் விவாதங்களையும், பகிர்வுகளையும், ஸ்டாலின் போடும் சர்க்குலர்களையும், போராட்டங்கள் குறித்து மா.செ.க்களுக்கு பிரத்யேகமாக அவர் கொடுக்கும் உத்தரவுகளையும் அப்படியே சுடச்சுட இ-காப்பி எடுக்கிறது உளவு போலீஸ். சமீபத்தில் ஸ்டாலின் தன் மா.செ. க்களுக்கு சொல்லிய தகவல்கள் அமைச்சர்கள் சிலரால் பொதுமேடையில் உதிர்க்கப்பட்டு, விமர்சிக்கப்பட அவர் அதிர்ந்து போயிருக்கிறார். அதன் பின்னணி இதுதான்.

இனி தேர்தலில் கூட்டணி முதல் பூத் கமிட்டி பிரச்சனை வரை எல்லாவற்றையுமே தெளிவாக ஸ்கேன் செய்து காய் நகர்த்துவார்கள். அ.தி.மு.க.வின் ஐ.டி. விங் சார்பாக ஒவ்வொரு கிளைக்கும் சில நபர்களை நியமித்து, இப்படி வாட்ஸ் அப் குரூப்களின் வழியே வந்து விழும் தகவல்களை வைத்து ஆக்ஷன் களில் இறங்கி, சூழலை தங்களுக்குச் சாதகமாக மாற்றவும் முடியும் என்கிறார்கள். தேர்தல் நேரத்தில்

தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு இயங்கும் வாட்ஸ் அப் குழுவினுள்ளும் உளவு இறங்கலாம். ஏன், இப்போது உங்கள் வாட்ஸ் அப் குழுவுக்குள்ளும் அமர்ந்து, ஜம்மென்று உளவு போலீஸ் கண்காணித்து வரலாம். பொதுமக்களே உஷார்.



**R. அகிலேஷ்**

*பொறுப்பு இணை ஆசிரியர்*



தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் என்றும், தஞ்சை பெரியகோவில் என்றும், தஞ்சை பெருவுடையார் கோவில் என்றும் அழைக்கப்பட்ட சிவன் கோவில் ஆகும். உலகப் பாரம்பரியச் சின்னமும் ஆகும்.

# தஞ்சை பெரிய கோவிலுக்கு நீதி கிடைக்குமா?

இந்தியாவில் அமைந்துள்ள மிகப்பெரிய கோவில்களில் இதுவும் ஒன்றாகவும் அற்புதமான கட்டிடக்கலை அம்சத்தைக் கொண்ட இந்தியக் கோவில்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. கிபி 11-ஆம் நூற்றாண்டில் முதலாம் இராஜராஜ சோழன் இக்கோயிலைக் கட்டுவித்தான். 1003-1004 ஆம் ஆண்டு தொடங்கி 1010 ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்த கோவிலுக்கு 2010 வது ஆண்டோடு 1000 ஆண்டு நிறைவடைந்தது. இக்கோவில் தமிழகத்தின் மிகமுக்கியமான சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. 1987 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது.

அழியாத சோழர் பெருங்கோவில்கள் என்ற பெயரில் இக்கோவில், கங்கைகொண்ட சோழீசுவரர் கோவில், தாராசுரம் ஐராவதேசுவரர் கோவில் ஆகிய மூன்றும் யுனெஸ்கோ நிறுவனத்தால் பொது ஊழி உலகப்பாரம்பரியக் களப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

முதலாம் இராஜராஜ சோழனால் கட்டுவிக் கப்பட்ட இக்கோவில் துவக் காலத்தில் இராஜராஜேஸ் வரம் என்றும், பின்னர், தஞ்சைப் பெருவுடையார் கோவில் என்றும், 17 ஆம் மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் மராட்டிய மன்னர்களால் ஆளப்பட்டபோது பிரகதீசுவரம் என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

இப்படிப்பட்ட புகழ்பெற்ற கோவிலைச் சுற்றி பிரபலமருத்துவமனைகள்மற்றும்நீதிமன்றங்கள், மாவட்ட காவல்துறை துணைத் தலைவர் அலுவலகம், கிளை





நந்தகுமார்

சிறைச்சாலைகள் அனைத்தும் சுமார் 100 மீட்டருக்கு உட்பட்டுள்ளது. தஞ்சாவூர் கச்சேரி ரோட்டில் மேம்பாலம் அருகில் பாண்டிய தங்கும் விடுதி உரிமையாளர் நந்தகுமார் அவர்கள் அப்போதைய ஆளுங்கட்சியை சரிகட்டி தன்னுடைய தங்கும் விடுதிக்கு மதுபானங்கள் நடத்துவதற்கு மோசடியான ஆவணங்களை கொடுத்து அனுமதி பெற்றிருப்பதாக தெரிய வருகிறது. மேற்படி பார் குடிக்க வரும் பொதுமக்கள் குடித்துவிட்டு புகழ்பெற்ற கோவிலுக்கு அருகில் கலாட்டா செய்வதும், பொதுமக்களுக்கு இடையூறு செய்வதும், வழிபறி செய்வதும், தொடர்ந்து செய்து வருகிறார்கள்.



சிவராஜா

இது சம்மந்தமாக சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம், மதுரை உயர்நீதிமன்றத்தில் மதுபான பாரை அகற்ற சொல்லி பொதுநல வழக்கு போட்டு வழக்கை நடத்தி வருகிறார்கள். இது சம்மந்தமாக இந்த வழக்கை நடத்திவரும் மதுரை வழக்கறிஞர் சிவராஜா விடம் கேட்டபோது மேற்படி வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருப்பதால் சுமார் இன்னும் 1 மாதத்தில் தீர்ப்பு வரும்நேரத்தில்நான் கருத்து சொன்னால்நல்லாருக்காது என்று முடித்துக் கொண்டார்.



லோகநாதன் IPS

இது சம்மந்தமாக தஞ்சை மாவட்ட காவல்துறை துணைத்தலைவர் திரு.லோகநாதன் IPS அவர்களிடம் கருத்து கேட்டபோது நீதிமன்றத்தில் உத்தரவு வந்தவுடன் நீதிமன்ற உத்தரவுப்படி காவல் துறையினர் கண்டிப்பாக நடந்து கொள்வார்கள் என்று முடித்துக் கொண்டார்.

எனவே எதிர்காலத்தில் தஞ்சை பெரியகோவில் ஐயப்பன் கோவில் போன்று கலவரம் நடக்காமல் இருப்பதற்கு மக்களுக்கும் நல்லது நாட்டிற்கும் நல்லது.



**M. ராமசந்திரன்**
*தலைமை செய்தி ஆசிரியர்*

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மணலை, வீட்டிற்கே, 'சப்ளை' செய்யும் புதிய திட்டத்தை, ஜனவரி முதல் செயல்படுத்த, தமிழக அரசு, அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. இதனால், கட்டுமானங்களுக்கு நிலவும் மணல் தட்டுப்பாடு நீங்க வாய்ப்புள்ளது.

முதற்கட்டமாக, சென்னை மற்றும் தூத்துக்குடியில் திட்டத்தை அறிமுகம் செய்யும் அரசு, 100 கி.மீ., தூரத்தில் உள்ள இடங்களுக்கு, லாரிகளில் மணலை வினியோகம் செய்ய உள்ளது.

தமிழகத்தில், காவிரி, கொள்ளிடம், பெண்ணையாறு, கொசஸ்தலை, ஆரணியாறு உள்ளிட்ட பல ஆறுகளில், 60க்கும் மேற்பட்ட மணல் குவாரிகளை, பொதுப்பணித் துறை வாயிலாக அரசு இயக்கி வருகிறது. இதற்காக, ஒப்பந்ததாரர்களை நியமித்து, குவாரிகளில் மணல் விற்பனை செய்யப்பட்டது.

ஒப்பந்ததாரர்கள், விதியை மீறி மணல் அள்ளியதால், ஆறுகளில் நீரோட்டம் பாதிக்கப்படுவதாக புகார் எழுந்தது. இது குறித்து தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம், பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்தது.

இதைத்தொடர்ந்து, மணல் விற்பனையை முறைப்படுத்த, அரசு சில நடவடிக்கைகளை எடுத்தது. மே முதல், நேரடி மணல் விற்பனையை பொதுப்பணித்துறை துவங்கியது. இதற்காக, தனி இணையதளம் மற்றும், 'மொபைல் ஆப்' சேவை துவக்கப் பட்டது. எனினும், குறைந்த

எண்ணிக்கையிலேயே குவாரிகள் செயல் படுவதால், கட்டுமானத்திற்கான மணல் கிடைக்காமல், தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில், வெளிநாடு களில் இருந்து மணல் இறக்குமதி செய்வதற்காக, இரண்டு




# இனி இல்லை மணல் தட்டுப்பாடு!

தனியார் நிறுவனங்களிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. முதற்கட்டமாக, மலேஷியாவில் இருந்து, மணல் இறக்குமதி செய்யப்பட்டது. உச்ச நீதிமன்ற உத்தர வின்படி, தூத்துக்குடி துறைமுகத்தில், தனியாரால் இறக்குமதி செய்யப்பட்ட மணல், விற்பனையும் துவங்கப்பட்டுள்ளது. தற்போது வரை, 56 ஆயிரம் டன், வெளிநாட்டு மணல்விற்கப்பட்டுள்ளது.

வாயிலாக, முன்பதிவு செய்யும் போது, சம்பந்தப்பட்ட வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட வேண்டும். இதனால், பொதுமக்களால் நேரடியாக மணலை பெற முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.





எண்ணூர் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மணல், 1 யூனிட், 10 ஆயிரத்து, 350 ரூபாய் என, அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது. ஆனால், லாரி உரிமையாளர்கள் நிர்ணயிக்கும் வாகன வாடகையுடன் சேர்த்து, மணலை கூடுதல் விலைக்கு வாங்க வேண்டிய நிர்ப்பந்தம், பொதுமக்களுக்கு ஏற்பட்டு உள்ளது.

காணும் வகையில், பொதுப்பணித் துறை வாயிலாக, வீடுகளுக்கே நேரடியாக மணலை, வினியோகிக்கும் திட்டத்தை செயல்படுத்த அரசுமுடிவெடுத்துள்ளது. இத்திட்டம், ஜனவரி முதல் நடைமுறைக்கு வரஉள்ளது. இதற்கான அறிவிப்பு, வெளியானது.இந்த திட்டம், முதற்கட்டமாக சென்னை மற்றும் தூத்துக்குடியில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இங்கிருந்து, 100 கி.மீ., துாரத்தில் உள்ள வீடுகளுக்கு, லாரிகளில் வினியோகம் செய்யப்பட உள்ளது.

இதன்படி, எண்ணூர் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் மணல், அதிக கட்டுமானங்கள் நடைபெறும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களின் சுற்றுப்பகுதிகளுக்கு வினியோகம் செய்யப்படும். தூத்துக்குடியில் இறக்குமதியாகும் மணல், நெல்லை, கன்னியாகுமரி, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு, வினியோகம் செய்யப்பட உள்ளது.

'அரசின் இந்த நடவடிக்கையால், கட்டுமானங்களுக்கு தற்போது நிலவி வரும் மணல் தட்டுப்பாடு நீங்கும். இது மட்டுமின்றி, வாகன வாடகைக்கு கூடுதல் பணத்தை இழக்கும் நிலை, பொதுமக்கள் மற்றும் கட்டு மான நிறுவனங்களுக்கு ஏற்படாது' என, பொதுப் பணித்துறை அதிகாரிகள் கூறினர்.



**M. ஆனந்தி**
புகைப்பட நிருபர்



# சிக்கலில் சிக்கிய அமைச்சர் ஜெயக்குமார்

## உண்மை என்ன?

### ஓர் அதிர்ச்சி ரிப்போர்ட்

தமிழகத்தின் செம ஹாட்டாபிக் ஆகியிருக்கிறார் அமைச்சர் ஜெயக்குமார். தன்னிடம் உதவி கேட்டுவந்த ஓர் இளம் பெண்ணை அமைச்சர் ஜெயக்குமார் கர்ப்பமாக்கி, அந்தப் பெண்ணுக்குக் குழந்தையும் பிறந்திருப்பதாக ஜெயக்குமாரின் பெயருடன் வெளியாகியிருக்கும் பிறப்புச் சான்றிதழையும், அவர் பேசியதாகக் கூறப்படும் ஆடியோக்களையும் வெளியிட்டுப் பந்தி வைக்கிறார்கள் தினகரன் ஆதரவாளர்கள். எந்த சர்ச்சை என்றாலும் முந்திக்கொண்டு பேட்டி தரும் ஜெயக்குமார், தனக்கு இப்படி ஒரு சூழல் என்று கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டார். ஆனாலும், இந்த சலசலப்புகளுக்கு எல்லாம் அஞ்சாமல், நிருபர்களின் சரமாரி கேள்விகள் அனைத்துக்கும் பொறுமையாகப் பதில் அளித்து, தினகரன் அணிக்குப் பதிலடியும் கொடுத்திருக் கிறார் ஜெயக்குமார்.

மேற்கண்ட சம்பவத்தில் என்னதான் நடந்தது, யார் அந்த இளம்பெண், திரைமறைவில் இப்போது நடப்பது என்ன?

அ.ம.தி.க.-வின் வடசென்னை மாவட்டச் செயலாளரும், தகுதிநீக்க எம்.எல்.ஏ-க்களில் ஒருவருமான வெற்றிவேல் சில நாள்களுக்கு முன்பு எதிரணியைப் பார்த்து, பேசுவதை நிறுத்த வேண்டும், இல்லாவிட்டால் அசிங்கப்படுத்திவிடுவேன் என்று ஆவேசமாக வெடித்தார். புரிய வேண்டியர்களுக்குப் புரிந்ததா புரியவில்லையா என்று தெரியவில்லை. மீண்டும் சிலநாள்கள் கழித்து, அ.தி.மு.க எம்.பி. ஒருவருக்குத் தம்பி பாப்பா பிறந்திருக்கிறது என்று ஒரு வியத்தைக் கமுக்கமாகத் தட்டிவிட்டார். விவகாரம் லேசாகப் பற்றிக்கொள்ளத் தொடங்கியது. அவரிடம் பத்திரிக்கையாளர் இதுபற்றித் துருவித்துருவிக் கேட்டபோது, பாதிக்கப்பட்ட அபலைப் பெண்ணுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அது கிடைத்தால், நான் ரகசியங்களை வெளியிட மாட்டேன். இல்லா விட்டால், வெளியிடுவேன் வெயிட் பண்ணுங்கள் என்று சஸ்பென்ஸ் வைத்துப் பேசினார்.

இந்த நிலையில், 14.10.18 தேதியிட்ட ஜூ.வி. கழுகார் பகுதியில், எம்.பி-க்கு தம்பி பாப்பா என்கிற தலைப்பில் ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டிருந்தோம்.

இந்த நிலையில்தான் 2018 அக்டோபர் 21-ம் தேதி இரவு, சென்னை மாநகராட்சி சார்பில் தரப்பட்ட ஒரு பிறப்புச் சான்றிதழ், வாட்ஸ் அப்பில் வெளியானது. அதில், ஆகஸ்டு 9-ம் தேதியன்று பிறந்த ஆண் குழந்தையின் அம்மா பெயர் ஜே.சிந்து, அப்பா பெயர் டி.ஜெயக்குமார், குழந்தை பிறந்த மருத்துவமனையின் பெயர் மற்றும் மருத்துவமனையின் முகவரி, குழந்தையின் பெற்றோர் முகவரி ஆகிய விவரங்கள் இருந்தன. தொடர்ந்து, அ.ம.மு.க வின் ஜெயா ப்ளஸ் டி.வி-யில் பிரேக்கிங் நியூஸ் என்று ஓர் ஆடியோ வெளியானது.

எம்.பி-க்கு தம்பி பாப்பா என்கிற தலைப்பில் வெளியான அந்த ஆடியோவில், ஆண் பெண் உரையாடல் சுமார் பத்து நிமிடங்கள் ஒலிக்கிறது. இதில் என்னதான் நடந்தது என்பதை அறிய ராயபுரம் தொகுதியில் உள்ள தினகரன் அணியைச் சேர்ந்த பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினோம்.

அந்த இளம்பெண் சிந்து, பி.பி.ஏ படித்தவர். வயது 24. அவருக்குத் திருமணம் நடக்க ஏற்பாடாகி இருந்தது. ஆனால், மாப்பிள்ளை பார்க்க வருகிறர்கள் எல்லாம் ஏதேதோ காரணங்கள் சொல்லித் தட்டிக் கழித்தனர். இதனால், சிந்துவின் அம்மா நிம்மதி இல்லாமல் தவித்திருக்கிறார். இதற்குத் தீர்வு தேடுவதற்காக அவர்கள் கோவளம் பகுதியில் உள்ள மாந்திரீகப் பிரமுகரிடம் சென்றிருக்கிறார்கள்.

அவர் சில திருமணப் பரிகாரங்களைச் செய்து விட்டு ஒன்றரை லட்சம் ரூபாயைக் கறந்திருக்கிறார். ஆனால், பல மதங்களாகியும் சிந்துவுக்குத் திருமணம் நடக்கவில்லை. இதனால் மாந்திரீகப் பிரமுகரிடம் போய் பணத்தைத் திரும்பக் கேட்டுள்ளனர். அவர் பணத்தைத் திருப்பித் தர மறுத்ததுடன் உங்களால் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று சத்தம் போட்டிருக்கிறார்.



சிந்துவின் அம்மா கோவளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. இதனால் கடும் மன உளைச்சலில் இருந்திருக்கிறார் சிந்துவின் அம்மா. இந்தச் சூழலில்தான் உறவினர்கள் சிலர் இந்த வியத்தை தொகுதி எம்.எல்.ஏ-வும் அமைச்சருமான ஜெயக்குமாரிடம் எடுத்துச் சென்றதால், அவர் பேசிப் பணத்தை வாங்கித் தருவார் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

இதையடுத்து அம்மாவும் மகளும் உள்ளூர் அ.தி.மு.க பிரமுகர் ஒருவரை சிபாரிசுக்கு அழைத்துக் கொண்டு, அமைச்சர் ஜெயக்குமாரைப் போய் சந்தித்திருக்கிறார்கள். அப்பேது உன் பேரு என்னம்மா? என்றவர் பிரச்சனை குறித்து மிகவும் அக்கறையுடன் விசாரித்தாராம். அவர்களும், திருமணத் தடைகள் பற்றியும் பரிகாரம் செய்வதாகப் பணத்தை வாங்கிக்




கொண்டு ஏமாற்றிய பிரமுகர் பற்றியும் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பின்பு ஜெயக்குமார், போன் நம்பரைத் தந்துவிட்டுப் போங்கள். பிறகு அழைக்கிறேன் என்று சொல்லி அனுப்பினாராம்.

திடீரென்று ஒரு நாள், ஜெயக்குமாரிடம் இருந்து போன் அழைப்பு வந்ததாம். அப்போது, சிந்துவின் அம்மா ஊரில் இல்லை. சிந்து மட்டும் தனியாக இருந்தாராம். அவரை தனது அலுவலகத்துக்கு வரச் சொல்லியிருக்கிறார் அமைச்சர். சிந்து மறுக்கவே, கோவளம் இன்ஸ்பெக்ட வரச் சொல்லிவிட்டேன். உனக்குத் தெரிந்ததை வந்து சொல்லு என்றும் வற்புறுத்தினாராம். தயங்கித் தயங்கி சிந்து போயிருக்கிறார். இவர் போனபோது, அலுவலகமே வெறிச் சோடிக்கிடந்ததாம். அப்போது வந்த ஜெயக்குமார், கையில் இரண்டு ஜூஸ் டம்ளர்களை வைத்திருந்தாராம். அதில் ஒன்றை சிந்துவிடம்

கொடுத்து, இந்தா குடி என்று சொல்ல சிந்துவும் குடித்தாராம். அதன் பின்பு அவருக்கு மயக்கம் ஏற்பட்டதாம். நீண்ட நேரத்துக்குப் பிறகு கண் விழித்த போது, ஏதோ விபரீதம் நடந்துவிட்டதை உணர்ந் திருக்கிறார்.

அங்கிருந்த அழுதபடி வீட்டுக்கு ஓடியிருக்கிறார். நடந்ததை போன் மூலம் வெளியூரில் இருந்த தன் அம்மாவிடம் சொல்லியிருக்கிறார். இப்படித்தான் இந்த விவகாரம் சிந்துவின் குடும்பத்தினருக்குத் தெரிந்திருக்கிறது என்றவர்களிடம் இடைமறித்து, இந்த விவகாரத்தில் ஜெயக்குமார் தவறு செய்யவில்லை. அவரது இமேஜை சீர்குலைக்க அவரின் அரசியல் எதிரிகளுடன் சேர்ந்து சிந்து தரப்பினர் அபாண்டமாகப் பொய் சொல்வதாக ஜெயக்குமாரின் ஆதரவாளர்கள் சொல்கிறார்களே என்று கேட்டோம்.

எங்களுக்கு அப்படி எல்லாம் அவசியமே இல்லை. அவர் செய்த தவறுக்கு அவர் அனுபவிக்கிறார். கேளுங்கள் இன்னும் இருக்கிறது. அதன் பின்பு சிந்துவின் அம்மா இதுகுறித்து ஜெயக்குமாரிடம் போய் நியாயம் கேட்டபோது, நான் சிந்துவின் கழுத்தில் தாலி கட்டுகிறேன். தனி வீடு பார்த்துக் குடி வைக்கிறேன். இரவு நேரங்களில் ஹெல்மெட் அணிந்துகொண்டு ஸ்கூட்டரில் வீட்டுக்கு வந்து போகிறேன். உங்கள் குடும்பத்துக்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ எல்லாம் செய்து தருகிறேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அதை அவர்களும் நம்பினர்.

அப்போலோ மருத்துவமனையில் ஜெயலலிதா சிகிச்சையில் இருந்தபோது அரவக்குறிச்சி, தஞ்சாவூர், திருப்பரங்குன்றம் ஆகிய சட்டமன்றத் தொகுதி களுக்குத் தேர்தல் வந்தது. அரவக்குறிச்சி தொகுதி தேர்தல் வேலைகளைக் கவனிக்க ஜெயக்குமார் போயிருந்தார். அதற்காக திண்டுக்கல்லில் உள்ள பிரபல ஹோட்டலில் தங்கினார். அங்கேதான் சிந்துவையும் தங்க வைத்திருந்தார். அதையெல்லாம் அங்கே இருப்பவர்களிடம் இப்போது கேட்டால்கூட தெரியும். ஒவ்வொரு முறையும் சிந்துவிடம் நெருங்கிப் பழகும் முன்பு, சில மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும் என்று ஜெயக்குமார் கூறியிருந்தாராம். அதன்படிதான், சிந்துவும் செய்திருக்கிறார். இப்படிப் பலமுறை நெருக்கமான சந்திப்புகள் அரங்கேறியிருக்கின்றன.

ஆனால், பல மாதங்கள் ஆன பின்பும் திருமணப் பேச்சை எடுத்தாலே ஏதோ சொல்லி மழுப்பியிருக்கிறார் ஜெயக்குமார். இதனால் சிந்து குடும்பத்தினருக்கு சந்தேகம் வந்துவிட்டது. அதன்பிறகு அவருடன் நெருங்கிப் பழகியபோது, முன்னெச்சரிக்கையாகச் சாப்பிடும் மாத்திரையைச் சாப்பிடாமல் இருந்திருக்கிறார் சிந்து. கர்ப்பம் தங்கிவிட்டது. இந்த வியம் ஜெயக் குமாருக்கு தெரியவே கோபம் அடைந்தவர், ஒன்றரை லட்சம் ரூபாய் வரை கொடுத்துக் கருவைக் கலைக்கச் சொல்லியிருக்கிறார்.

சிந்துவின் அம்மாவும் மருத்துவமனையில் 80 ஆயிரம் ரூபாய் செலவானதாகச் சொல்லி, மீதிப் பணத்தைத் திருப்பி ஜெயக்குமாரிடம் கொடுத் திருக்கிறார். இதை நம்பி விட்டார் ஜெயக்குமார். ஆனால் குறிப்பிட்ட காலத்தைக் கடந்தவிட்டதால், இனி கலைத்தால் சிந்து உயிருக்கு ஆபத்து என்று மருத்வதுவர்கள் தரப்பில் சொன்னதால், அவர்கள் பயந்து, கருவைக் கலைக்கவில்லை. இப்படித் தான் ஆண் குழந்தை பிறந்தது. அவர்களும் குழந்தைக்கு அப்பா ஜெயக்குமார் என்று பிறப்புச் சான்றிதழில் பதிய வைத்திருக்கிறார்கள். இடையில் சிந்துவின் அம்மாவுடன் ஜெயக்குமார் பேசிய ஆடியோ பேச்சுகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஜெயக்குமார் ஏமாற்றுகிறார் என்று தெரிந்த பிறகுதான், தேவையான ஆதாரங்களைச் சேகரித்திருக்கிறார்கள் அவர்கள். அமைச்சர் என்கிற புனிதமான பதவியைப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்திருக்கிறார் ஜெயக்குமார் என்றார்கள்.

இந்த வியத்தில் உள்விவகாரங்களை அறிந்த சிலர் ஜெயக்குமார் கருவைக் கலைக்கச் சொன்னதுவரை அமைச்சரின் பார்வையில்தான் சிந்து இருந்தார். அதன் பின்பு பாதுகாப்பு கருதி சிந்துவின் குடும்பத்தினரை தினகரன் ஆதரவாளர்கள் சிலர் கஸ்டடி எடுத்துவிட்டனர். இதற்கிடையே ஜெயக் குமாரும் இந்த வியத்தை மறந்துவிட்டார். குழந்தையும் பிறந்துவிட்டது. அதன் பின்னணியில்தான் தினகரனை ஜெயக்குமார் கடுமையாக விமர்சித்துப் பேசியபோது, பேசுவதை நிறுத்த வேண்டும் இல்லாவிட்டால் அசிங்கப்படுத்திவிடுவேன் என்று எம்.எல்.ஏ வெற்றிவேல் எச்சரித்தார். அதன் பின்பு சிந்துவின் குடும்பத்தினருடன் சிலபல பேச்சு வார்த்தைகள் நடந்தன. ஆனால், எதிர்பார்த்தது நடக்கவில்லை என்பதால் இப்போது விசயம் வெளிப்பட்டுவிட்டது என்றார்கள்.

இது தொடர்பாக பொதுவெளியில் வெளியான ஆடியோ உரையாடல் இல்லாமல், மேலும் இரண்டு ஆடியோ பதிவுகள், ஹோட்டல் பில், சில புகைப் படங்கள் உள்ளிட்ட முக்கியமான ஆதாரங்கள் பிரத்யேகமாகக் கிடைத்துள்ளன. இவற்றை வைத்துக்கொண்டு, சிந்துவின் குடும்பத்தினரைத் தொடர்புகொள்ள முயற்சி செய்தபோது அவர்கள் ஊரிலேயே இல்லை என்ற தகவல் கிடைத்தது. குழந்தை பிறந்த நர்சிங் ஹோமுக்குச் சென்றபோது, தனிப்பட்ட முறையில் சில தகவல்கள் கிடைத்தன. ஆனால், அதிகாரபூர்வமாக அவர்கள் பேச மறுத்து விட்டனர். அமைச்சர் ஜெயக்குமாரிடம் விளக்கம் கேட்க நம் நிருபர்கள் முயன்றபோது, அவரைத் தொடர்புகொள்ள முடியவில்லை.

இந்த நிலையில்தான் அக்டோபர் 22-ம் தேதி மாலை பத்திரிக்கையாளர்களைச் சந்தித்துத் தனது விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார் அமைச்சர் ஜெயக்குமார் என்னை அரசியல் ரீதியாக நேரடியாக எதிர்கொள்ள முடியாத கோழைகள் அரசியல் கோப்பு உணர்ச்சி காரணமாக இவ்வாறு அவதூறுகளைப் பரப்புகிறார்கள். இதன் பின்னால் சசிகலா, தினகரன் குடும்பத்தைச் சேர்ந்த மாஃபியாக்கள் இருக்கிறார்கள்.

இந்த ஆடியோ விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்துக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடர உள்ளேன். காவல் துறையிலும் புகார அளிக்க உள்ளேன். ஆடியோவில் இருக்கும் அந்தக் குரல் என் குரலே அல்ல. அது போலியானது. அதேபோல், பிறப்புச் சான்றிதழில் டி.ஜெயக்குமார் என்று இருப்பதால் அது நான்தான் என்று எப்படி முடிவு செய்ய முடியும்? என் பெயரைக் கெடுக்க வேண்டும் என்றே சிலர் சதி செய்துள்ளார்கள்.

இந்த ஆடியோ விவகாரம் சில நாள்களுக்கு முன்பே செய்திகளில் அடிபட்டது. ஆனால், அதில் என் மீது நேரடியாக குற்றம் சாட்டவில்லை என்பதால் அமைதியாக இருந்தேன் என்று சொல்லியிருக்கிறார். நாம் குறிப்பிட்டுள்ள வியங்கள் தனிப்பட்ட முறையில் ஜெயக்குமார் விளக்கம் கொடுத்தால் அதைப் பிரசுரிக்கத் தயாராக இருக்கிறோம். ●



**S. கலைவாணி**
*முதன்மை துணை ஆசிரியர்*



திருப்பூர் மாவட்டம், பல்லடம் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் திரு. விஜயகுமார் அவர்களை நேரில் சந்தித்து சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் சர்வதேச துணைத் தலைவர் டாக்டர் எஸ். ஆயிஷா அவர்கள் மனித உரிமைகள் மீட்பு இதழினை வழங்கினார்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டுப் போர் முடிந்து, ஒன்பது ஆண்டுகள் கடந்த நிலையில், ஈழ மண்ணில் தோண்டத்தோண்ட எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்படுவது, உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் மக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளை கூண்டோடு அழித்த பிறகும், மிச்சமிருக்கும் தமிழ் இனத்தையும் அழிக்கும் சதித்திட்டத்துடன் சிறிசேனா தலைமையிலான அரசும், சிங்கள ராணுவமும் செயல்பட்டு வருவதாக, அண்மையில் அங்கு கள ஆய்வு செய்து திரும்பிய தமிழக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குழு அதிர்ச்சியைக் கூட்டுகிறது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய தமிழகர்களின் வாக்கையை நேரில் கண்டறிய சென்னை பல்கலைக்கழக அரசியல் மற்றும் பொது நிர்வாகத்துறையின் தலைவரும் பேராசிரியருமான ராம் மணிவண்ணன் தலைமையில் கல்வியாளர்கள், வழக்கறிஞர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய குழு ஒன்று கடந்த வாரம் இலங்கை சென்று தமிழகர்கள் வாழும் பகுதியில் கள ஆய்வில் ஈடுபட்டு சென்னை திரும்பியுள்ளனர். கள ஆய்வு குறித்து ராம் மணிவண்ணனிடம் பேசினோம்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் என்ற இனம் இருந்ததற்கான அடையாளமே இருக்கக் கூடாது என்ற நயவஞ்சக எண்ணத்தில் இலங்கை அரசு நீண்ட காலத் திட்டம் வகுத்துச் செயல்படுவதற்கு நம்பத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அதன் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளவும், போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசியல், பொருளாதார, சமூக மாற்றம், பெண்கள், இளைஞர்களின் பாதுகாப்பு, வாவோதாரம் உள்பட அனைத்து வியங்களின் உண்மை நிலையை தமிழக அரசியல் களத்திலும், மத்திய அரசுக்கும், சர்வதேச அளவிலும் வெளிப்படுத்தும் நோக்கத்துடன் இலங்கைக்கு ஐந்து நாள் பயணம் மேற்கொண்டோம். 2009 போரால் சீர்குலைந்து போன வடக்கு மாகாணத்தில் உள்ள முல்லைத் தீவு, மட்டக்களப்பு, கிளிநொச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டோம். அங்குள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களும் மனஉளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டு, எதிர்காலமே கேள்விக் குறியாகி, மிகவும் பின்தங்கிய நிலையில் நடைப்பிணமாக வாநேது வருகின்றனர் என்பதுதான் மிகப்பெரிய துயரம்.

போருக்குப் பிறகு சிறுவர், சிறுமியர், இளைஞர், இளம்பெண்கள் என 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா, இல்லையா என எந்தவொரு தகவலையும் தெரிவிக்காமல் இலங்கை அரசு கள்ள மவுனம் காக்கிறது. இந்தியா – பாகிஸ்தான் போருக்குப் பின்னர்கூட 90 ஆயிரம் பாகிஸ்தானியர்களை இந்தியா திருப்பி அனுப்பியது. வடக்கு மாகாணத்தில் தற்போது மிகுந்த அச்சத்துடன் பேசப்படும் வியம், புதைகுழிகள் பற்றிதான். மன்னார் மாவட்டத்தில் தோண்டப்பட்ட புதைகுழிகள் நூற்றுக்கணக்கான

# இலங்கையில் தோண்டத் தோண்ட எலும்புக் கூடுகள்



எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நிறைய சிறுவர்களின் எலும்புக் கூடுகள், அதுவும் பின்பக்கம் கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளன. அந்த புதைகுழிகளில் ஒன்றில்கூட உடை போன்ற துணி எதுவும் கைப்பற்றப்படவில்லை. போருக்குப் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் இப்படி கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் தமிழர்களிடம் எழுந்துள்ள நிலையில், இதுபற்றிய விசாரணையை மேற்கொள்ள அரசு முன்வரவில்லை.

இரண்டாவதாக போரின் போதும், பின்னரும் தமிழர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட விவசாய நிலம் உள்பட அனைத்து வகையான நிலங்களில்தான் ராணுவத்தினர் முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர். இலங்கை ராணுவத்தின் 70 சதவிகிதம் பேர், தமிழர் பகுதிகளில்தான் பாதுகாப்பு என்ற பெயரில் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் தமிழர் நிலங்களில் சிங்களவர்கள் படிப்படியாக குடியமர்த்தப்படுவது இன்றும் தொடர்கிறது. தமிழ இனத்தின் அடையாளமாக இருக்கும் நிலப்பரப்பை அழித்தொழிக்கும் வேலையில் இலங்கை அரசு முழுவீச்சில் செயல்பட்டு வருகிறது.

அடுத்த கவலைக்குரிய வியம் என்னவென்றால், இளம்வயதுடைய 20 வயது முதல் 40 வயதுக்குள் 90 ஆயிரம் விதவைகள், நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. அவர்களுக்கு எதிரான பாலியல் தொல்லைகள் இன்றைக்கும் தொடர்கிறது.

இந்தியா உள்பட பன்னாட்டு சமுதாயம் முன் வந்து உதவும் எந்த நலத்திட்டங்களும் நேரடியாக தமிழர்களுக்கு செல்வதில்லை. இந்தியா கட்டிக் கொடுத்த 50 ஆயிரம் வீடுகளில் பாதிக்கு மேல் ராணுவத்தினரும் சிங்கள மக்களும்தான் ஆக்கிரமித்து குடியிருக்கின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ந்து சிங்களர்களைக் குடியமர்த்தி தமிழர்களை சிறுபான்மையினராக மாற்றும் முயற்சி வேமாக நடந்து வருகிறது. அடுத்து தொல்லியல்ரீதியாக தமிழர் அடையாளங்களை அழிக்கும் வேலையும் வேமாக நடைபெற்று வருகிறது. கிழக்கில் இஸ்லாமியர் மற்றும் தமிழர்களிடையே மத ரீதியான பிரித்தாளும் சூழ்ச்சி மேற்கொள்ளப்படுவதாக, அங்குள்ள மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தமிழ் இலக்கியத்திலும் வரலாற்றிலும் இடம் பெற்றுள்ள திரிகோணமலை முன்பு முழுக்க முழுக்க தமிழர்கள் வசம் இருந்தது. இப்போது நகரமைப்பு







விரிவாக்கத் திட்டம் வழங்கும் என்ற பெயரில் 3 லட்சம் பேருக்கு வேலை வழங்கும் திட்டத்தில் இலங்கை அரசு தீவிரம் காட்டி வருகிறது. இதன் மூலம் தெற்கில் இருந்து சிங்களர்களை பெருமளவில் குடியமர்த்தி, திரிகோண மலையிலும் தமிழர்களை சிறுபான்மையினராக மாற்றி வருகிறார்கள். இதுபோன்ற காரணங்களால் தமிழகர்கள் மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்போது தமிழகர்களுக்கு எளிதாக கிடைப்பது என்ன தெரியுமா? கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் தான். தமிழ இளைஞர்களுக்கு இலவசமாக போதைப் பொருட்களைக் கொடுத்து நடைப்பிணமாக மாற்றும் வேலையையும் சிங்கள ராணுவம் செய்வருகிறது என்று தமிழர்கள் கண்ணீர் சிந்துகின்றனர்.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் விக்னேஷ்

வரனை சந்தித்துப் பேசினோம். தனது அதிகாரத் திற்குட்பட்ட பகுதிகளில்கூட, வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள முடியாத அளவிற்கு சிறிசேனா அரசு கட்டுப்பாடு விதித்துள்ளதாகத் தெரிவித்தார். இலங்கைத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தமும் சுமந்திரனும் இலங்கை அரசுக்கு பல்லக்கு தூக்கி வருவதாக ஈழத் தமிழ் மக்கள் கொந்தளிக்கின்றனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உள்பட அனைத்து தமிழ் கல்வி நிலையங்களிலும் சிங்கள மாணவர்கள் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டு வருகின்றனர். ஈழத் தமிழனின் நிலம், மொழி, கலாசாரம் எல்லாவற்றையும் படிப்படியாக சிங்கள அரசு அழித்துவருகிறது. இது இந்திய அரசுக்கு முழுமையாகத் தெரியும். ஆனால் இந்திய அரசு கண்டுகொள்ளாமல் கள்ள மௌனம் சாதிக்கிறது.

விடுதலைப் புலிகளுக்கான போர் என்ற பெயரில் அன்றும் இன்றும் இன அழிப்புதான் நடக்கிறது என்பதை எங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களுடன் தமிழக மற்றும் இந்திய அரசின் முன் வைக்கப் போகிறோம். ஐ.நா. சபையிலும் எடுத்துரைப்போம் என்றார், தீராத வேதனையுடன்.

ஈழத் தமிழ் பெண்களின் வேதனையைக் கேட்டு, மனம் நொந்துபோனோம் என்கிறார், குழுவில் இடம் பெற்ற சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் ராணி செந்தாமரை, போரில் கணவரை, தந்தையை, மகனை இழந்த பெண்கள் பல்லாயிரக்கணக்கானோர், ஒருவேளை உணவு கிடைக்காமல் தவிக்கின்றனர். இளம்விதவைகள் கட்டாயத்தின் பேரில் விபசாத் தொழிலுக்குத் தள்ளப்படுகின்றனர். அவர்களை அங்குள்ள தமிழ் மக்கள் கேவலமாகப் பார்க்காமல், மனிதாபிமானத்துடன் அரவணைப்பதுதான் ஒரே ஆறுதல். வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் வேண்டுகோள் ஒன்றுதான். அதாவது அவர்கள் நிதியுதவி எதிர்பார்க்கவில்லை. சிங்கள ராணுவத்தால், இலங்கை அரசால் அனுபவிக்கும் தொல்லைகளை காதுகொடுத்துக் கேட்க வடக்கு மாகாணத்தில் இந்திய தூதரகம் ஒன்று திறக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றனர்.

நாங்கள் தானே உங்கள் ரத்த உறவு, நாங்கள் என்றுமே இந்தியாவின் ஆதரவாளர்கள்தானே, பிறகு ஏன் எங்கள் குரலைக் கேட்க மறுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள் என்றார்.

பதில்தான் நம்மிடம் இல்லை.



**C. பெருமாள்**
*உதவி ஆசிரியர் குழு*



திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகராட்சி இளநிலை உதவியாளர் ராஜேந்திரன் அவர்களை நேரில் சந்தித்து சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் சர்வதேச துணைத் தலைவர் டாக்டர் எஸ். ஆயிஷா அவர்கள் மனித உரிமைகள் மீட்பு இதழினை வழங்கினார்.

# உலக பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் இந்தியா!

## பிரதமர் நரேந்திர மோடி



இரண்டு நாள் பயணமாக, கிழக்கு ஆசிய நாடான ஜப்பானுக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி, இந்திய வம்சாவளியினர் இடையே, உரையாற்றியதாவது:

இந்தியாவில் மிகப் பெரிய அளவில் மாற்றங்கள் நடந்து வருகின்றன. பல துறைகளில் முன்னோடியாக இருப்பதுடன், மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சியையும் இந்தியா பெற்றுள்ளது.

ஜன்தன், மொபைல் போன் மற்றும் ஆதார் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் பெரிய புரட்சி நடந்துள்ளது; இதை, உலக நாடுகள் ஆச்சரியத்துடன் பார்க்கின்றன.

நாட்டில் நடக்கும் மாற்றங்கள், முன்னேற்றங்கள் அனைத்தும், உலக நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையிலேயே செயல்படுத்தப்படுகின்றன. நாடு முழுவதும் தொலைதொடர்பு வசதி மூலம் இணைக்கப்பட்டு உள்ளது.

டிஜிட்டல் கட்டமைப்புகள் வலுவானதாக உள்ளன; 100 கோடி மொபைல் இணைப்பு என்ற மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளோம், 'மேக் இன் இந்தியா' என்பது, தற்போது உலகம் முழுவதும் பேசப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ், நம் நாட்டுக்காக மட்டுமல்ல, மற்ற நாடுகளுக்காகவும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரே நேரத்தில், 100க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்களை அனுப்பி, 'இஸ்ரோ' எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் விஞ்ஞானிகள், சாதனை படைத்துள்ளனர். வரும், 2022ல், முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, 'ககன்யான்' செயற்கைக்கோள் மூலம், இந்தியர் ஒருவர் விண்வெளிக்கு அனுப்பப்பட உள்ளார்.

அதிக அளவு வளர்ச்சிப் பணிகள் நடந்துவருவதால், நாட்டின் பொருளாதாரமும் வளர்ந்து வருகிறது. அடுத்த, 10 ஆண்டுகளில், உலகப் பொருளாதார வளர்ச்சியில், நம் நாட்டின் பங்கு மிகப் பெரியதாக இருக்கும் என, சர்வதேச அமைப்புகள் கூறி வருகின்றன. புதிய இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். இதற்கு, ஜப்பானும், ஜப்பானில் உள்ள இந்தியர்களும் உதவ வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இதற்கிடையே, இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே, யோகா, ஆயுர்வேதம் உட்பட, ஆறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.



**G. வெங்கடேசன்**
*நிர்வாக ஆசிரியர்*



# மக்களை வஞ்சிக்கும் மத்திய-மாநில அரசுகள் அதிகரிக்கும் மின் கட்டணம்

**அதிர்ச்சி ரிப்போர்ட்**

மின் கட்டணம் எக்கச்சக்கம் என்று ஏற்கனவே மக்களிடம் முணுமுணுப்பு இருக்கிறது. இந்த நிலையில், இலவச மின்சாரத்தை ரத்து செய்யும் வகையில், மத்திய மின்சாரச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு மத்திய அரசு முன் வந்திருப்பதாகத் தகவல் கிடைக்கவே, விசாரித்தோம்.

மின்சார சட்டத்தின் 45-வது பிரிவு மின் கட்டணத்தை வசூலிக்கும் அதிகாரத்தை மின் வாரியங்களுக்கு வழங்குகிறது. அதேசமயத்தில், இச்சட்டத்தின் 65-வது பிரிவு மின் கட்டணத்துக்கு மாநில அரசுகள் மானியம் வழங்குவதை முறைப் படுத்துகிறது. மாநில அரசுகள் பயனாளிகளுக்கு நேரடியாக மானியம் வழங்க வேண்டும் என்பதுதான் மின்சார சட்டத்தின் முக்கியமான அம்சம்.

இதை மேலோட்டமாகப் பார்க்கும்போது, நல்ல சீர்திருத்தமாகத் தெரியும். ஆனால், தமிழகம், கேரளா போன்ற மாநிலங்களில் விவசாயத்துக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்துக்கு இந்தப் பிரிவுதான் வேட்டு வைத்திருக்கிறது என்பதை அடிவரை அலசிப்பார்த்தால் மட்டுமே தெரிந்துகொள்ள முடியும்.

அதாவது, தமிழகத்தில் இப்போது விவசாயி களுக்கும் நெசவாளர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, அனைத்து வீடுகளுக்கும் முதல் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசு கொண்டு வந்திருக்கும் புதிய சட்ட திருத்தம் மூலம் விவசாயிகள் உள்ளிட்ட அனைவரும் தாங்கள் பயன்படுத்தும் மின்சார பயனீட்டு கணக்கை மின் வாரியங்களுக்கு அளிக்க வேண்டும். பின்னர், இதற்கான மானியத்தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுமாம்.

அதாவது மானிய விலையில் வழங்கி வந்த சமையல் எரிவாயு மானியம், எப்படி வங்கிக் கணக்கில் மாற்றப்பட்டதோ, அதே பாணியில் மின்சாரக் கட்டண நடைமுறையும் மாற்றப்படுமாம்.

பின்னர், அனைத்து மின் இணைப்புகளுக்கும் டிஜிட்டல் மீட்டர்கள் பொருத்தப்பட்டு, மின் பயனீட்டு கணக்கு ஒரு வட்டத்துக்குள் கொண் வரப்பட்டு, படிப்படியாக இலவச மின்சாரம் தடை செய்யப்படுமாம். வருமான வரம்பு, வீட்டில் பயன்படுத்தப்படும் யூனிட் கணக்கீடு, கார், பைக் வைத்திருக்கும் விவரம் போன்ற பல்வே வியங்களைக் கணக்கிட்டு, இலவச மின்சாரம் நிறுத்தப்படும்.

இலவச மின்சாரத் திட்டத்தை ரத்து செய்வதற்கான விதையை மத்திய அரசு சில ஆண்டுகளுக்கு முன்பே விதைத்து விட்டது. இறுதியாக கடந்த ஜூலை மாதம் வெளியிட்ட மாநில மின்வாரியங்களின் செயல்பாடுகள் குறித்த மதிப்பீட்டு அறிக்கையை மத்திய எரிசக்தி அமைச்சம் வெளியிட்டது. அதில் இலவச மின்சாரத்தை

ரத்து செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் மேலாக இலவச மின்சாரத்தை அடுத்த 3 ஆண்டுகளில் முழுமையாக நிறுத்த வேண்டும் என்பதற்கான மறைமுக அழுத்தத்தையும் மத்திய மின்சார சட்டத் திருத்தம் அளிக்கிறது.



விவசாயத்துக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதால் ஏற்படும் இழப்பை ஈடுகட்டு வதற்காக, தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு அதிக கட்டணம் வசூலிக்கும் முறையை 3 ஆண்டுகளுக்குள் படிப்படியாக கைவிட வேண்டும் எனவும் புதிய சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இது கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான மறைமுக நடவடிக்கை என்றும் பேச்சு இருக்கிறது.

இதுகுறித்து மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநிலத் தலைவர் சுப்ரமணியத்திடம் கேட்டோம். மின்சார உற்பத்தியைப்போல மின் விநியோகத்தையும் தனியாரிடம் ஒப்படைக்க மத்தய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. புதிய சட்டப்படி, விவசாயம் மற்றும் குடிசை வீடுகளுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் நிறுத்தப்படும். பிறகு, கட்டண நிர்ணயம் மற்றும் கட்டண வசூல் தனியார் வசமாகிவிடும்.

அதனால் இன்னும் சில ஆண்டுகளில் தமிழக மின்சார வாரியம் செயலற்ற எலும்புக்கூடாகி விடும். அப்போது மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்சன்கூட நிறுத்தப்படும் அபாயம் இருக்கிறது. எனவே, இப்புதிய சட்டத்தை அமல்படுத்தக் கூடாது. இதற்கு தமிழக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தமிழக மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் சிங்கார ரத்தினசபாபதியிடம் பேசினோம். மத்திய அரசின் புதிய சட்டத்தால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். தனியார் லாப நோக்குடன் மின்சாரத்தை விநியோகம் செய்வார்கள். கிராமங்கள் புறக்கணிப்படும். தனியாரை நம்பி அரசு நிர்வாகம் செயல்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். தனியார் நிறுவனங்கள் மின் கட்டணத்தை எப்போது உயர்த்துவார்கள் என்பதையும் சொல்ல முடியாது. இது சாதாரண பொதுமக்களை நிச்சயம் பாதிக்கும். குடிசைகளுக்கும் ஆயிரக்கணக்கில் மின் கட்டணம் கட்டவேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

நிறைவாக தமிழக மின்சாரத்துறை அமைச்சர் தங்கமணியிடம் பேசினோம். மத்திய மின்சார சட்டத் திருத்தங்களை அமல்படுத்தக் கூடாது என ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது இரண்டு முறை கடிதம் மூலம் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தார். அவரால் உருவாக்கப்பட்ட இந்த அரசு அதே முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் மற்றும் குடிசை வீடுகளுக்கான மானிய விலை மின்சாரம் தொடர்ந்து வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் உறுதியாக.



மத்திய அரசின் உதய் மின் திட்டத்தில் ஜெயலலிதா முதல்வராக இருந்தவரை கையெழுத்திடவில்லை. ஆனால், ஜெயலலிதா மறைந்த பிறகு தற்காலிக முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் இந்த உதய் மின் திட்டத்தை ஆதரித்து கையெழுத்துப் போட்டுவிட்டார். அதேநிலை, இலவச மின்சாரத் திட்டத்திலும் வந்துவிடக் கூடாது!.

கண்டிப்பாக தேர்தலில் ஓ.பன்னீர் செல்வம் பதில் சொல்ல வேண்டும்.



**R. சரவணன்**
*பொறுப்பு ஆசிரியர்*

# காத்திருக்கும் ஆபத்து!

## ஓர் பகீர் ரிப்போர்ட்



சமீபத்தில் தெருவோர உணவகங்கள் குறித்து நாடாளுமன்றக் குழு ஒன்று உணவுப் பாதுகாப்பு குறித்த சில கேள்விகளை எழுப்பி யிருக்கிறது. இந்திய உணவுப் பாதுகாப்புத் தரநிர்ணய ஆணையத்தின் செயல்பாடு குறித்தும் நாடாளுமன்றக் குழு கண்டனம் தெரிவித் திருக்கிறது. உணவுப் பாதுகாப்பு குறித்து கண்காணிக்க வேண்டிய ஆணையம், அது குறித்து முறையான விதிமுறைகளை வகுத்து எந்த அளவுக்கு தெருவோர உணவகங்களின் சுத்தத் தையும், தரத்தையும் பாதுகாக்கிறது என்பதை நாடாளுமன்றக் குழு சரியான நேரத்தில் தட்டிக் கேட்க முற்பட்டிருக்கிறது.

நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமங்களி லும் தெருவோர உணவகங்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் இருக்கிறது. வேலையில் லாத இளைஞர்களுக்கும் கிராமப்புறங்களி லிருந்து நகரங்களுக்கு வேலை தேடி இடம் பெயர்பவர்களுக்கும் அதிக முதலீடு இல்லாமல் தொடங்கக்கூடிய தொழிலாக தெருவோர உணவகங்கள் உதவிக்கரம் நீட்டுகின்றன. தெருவோரத்தில் வாகனங்களை நிறுத்தியும், தள்ளு வண்டிகளிலும், நடைபாதைகளிலும் நடத்தப்படும் தற்காலிக உணவகங்கள் சாமானிய, நடுத்தர மக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதால்தான் இந்த அளவுக்கு பெருகிவருகின்றன என்கிற உண்மையையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது.

இந்திய உணவுப் பாதுகாப்புத் தரநிர்ணய ஆணையத்தைப் பொருத்தவரை, பெரிய உணவு விடுதிகளிலும், உணவுத் தயாரிப்பு நிறுவனங்களிலும் சோதனைகளை நடத்தி வருகிறதே தவிர, அனைத்துத் தளத்திலும் அதன் செயல்பாட்டை உறுதிப்படுத்தவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. உணவுக் கலப்படம், தவறான தகவல்களுடன் உணவுப் பொருள்களை விற்பனை செய்வது உள்ளிட்ட குற்றங்களில் உணவுப் பாதுகாப்புத் தரநிர்ணய ஆணையம் நடத்தியிருக்கும் சோதனைகளும், பதிவு செய்திருக்கும் வழக்குகளும், பெற்றுத் தந்திருக்கும் தண்டனைகளும் அதிர்ச்சி அளிக்கும் விதத்தில்தான் இருக்கின்றன.

2016-17 நிதியாண்டில் ஒட்டுமொத்த இந்தியாவில் ஆணையம் சோதனைக்காக எடுத்திருக்கும் மாதிரிகளின் எண்ணிக்கை வெறும் 18,325. இந்த மாதிரிகள் உணவுக் கலப்படத்துக்காகவும், தவறான தகவல்களுடன் விற்பனை செய்யப்பட்டதற்காகவும் ஆணை யத்தால் சோதனைக்கு எடுத்துச் செல்லப்பட் டவை. அவற்றில் 13,080 மாதிரிகளில் மட்டும் தான் குற்றம் அறியப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

வழக்கு தொடர்ந்த போது அவற்றில் 1,605 வழக்குகளில் மட்டுமே தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றிலும்கூட பெரும்பாலானவை வெறும் பிழையுடன் தண்டிக்கப்பட்டவை.

உணவுக் கலப்படத்துக்காக ஆணையத்தால் எடுக்கப்பட்ட மாதிரிகள் மிக மிக குறை வானவை. அதுகுறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்றக் குழு கூறியிருக்கிறது. இதற்கு ஆணையம் வழங்கும் காரணங்களான போதுமான விதிமுறைகள் இல்லை, ஊழியர்கள் இல்லை உள்ளிட்டவை ஏற்புடையதாக இல்லை.

இப்போது உணவுத் துறை என்பது இந்தியாவின் மிகப்பெரிய துறையாக மாறியிருக்கும் நிலையில், இது குறித்த தீவிரமான சிந்தனையும், கடுமையான கட்டுப்பாடுகளும் தேவை. நாடாளுமன்றக் குழு முன் வைத்திருக்கும் சில ஆலோசனைகள் உடனடியாக அரசாலும் ஆணையத்தாலும் கவனத்தில் கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டாக வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய அளவிலிருந்து தொடங்கி எல்லா நிலைகளிலும் உணவுப் பொருள்களுக்கான சோதனை மையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது நாடாளு மன்றக் குழுவின் மிக முக்கியமான பரிந்துரை. நடமாடும் சோதனை மையங்கள் மாவட்ட அளவில் ஏற்படுத்தப்படுவதை உடனடியாக உறுதிப்படுத்தலாம் என்றும் பரிந்துரைத் திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாதிரிக்கு எடுத்துக் கொள்ளப்படும் உணவுப் பொருள்கள் குறித்த சோதனையின் முடிவுகள் ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்றக் குழு வலியுறுத்துகிறது.







உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையம், தூய்மையான தெரு உணவுத் திட்டம் என்கிற ஒரு முயற்சியை தில்லியிலும் கோவாவிலும் அறிமுகப்படுத்தியது. அதன்மூலம், தில்லியில் 23,000 தெருவோர உணவகங்களிலும், கோவாவில் 700 தெருவோர உணவகங்களிலும் உணவுப் பாதுகாப்பு குறித்தும், சுத்தம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. அதேபோல உணவுப் பொருள்களை அகற்றுதல், இருக்கை வசதிகளை உறுதிப்படுத்துதல், கையில் உறையுடன் பரிமாறுதல் உள்ளிட்ட பல்வேறு இன்றியமையாத தேவைகள் இந்தத் திட்டத் தின் மூலம் அறிவுறுத்தப்படுகின்றன. இதை இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்த போதுமான வசதியோ, நிதி ஆதாரமோ இல்லை என்கிற ஆணையத்தின் பதிலை நாடாளுமன்றக் குழு அரசிடம் தெரிவிக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

பொது சுகாதாரத்தின் அடிப்படை உணவுப் பாதுகாப்பு என்பதை உள்ளாட்சி அமைப்புகளும், உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையமும் உணர்ந்து செயல் பட்டால் மட்டும் போதாது. உணவகங் களும் அவற்றை நாடும் பொது மக்களும் அதை உணர்ந்தாக வேண்டும்.

தர நிர்ணயமும் சுத்தமும் இல்லாமல் தெருவோர உணவகங்கள் முறைப்படுத் தப்படாமல் வரைமுறையின்றிப் பெருகு மேயானால், காலரா, மலேரியா, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட தொற்று நோய்களை நாமே வருந்தி அழைப்பதாக ஆகிவிடும்.'



**S. அருள்செலின் மேரி**
செய்தி ஆசிரியர்

# மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் டிடெக்டிவ்



தி.மு.க. செய்தி தொடர்பாளர் பதவியில் இருந்து டி.கே.எஸ். இளங்கோவன் நீக்கப்பட்ட விவகாரம், டெல்லி பா.ஜ.க.வில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாம். குடியரசு துணைத்தலைவர் வெங்கையா நாயுடு உள்பட முன்னணி பா.ஜ.க தலைவர்களுடன் இளங்கோவனுக்கு மிக நெருக்கமான நட்புறவு உண்டு. அவருடைய பதவி நீக்கத்திற்கு தமிழகத்தில் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வரும் நிலையில், பா.ஜ.க.வுடன் தி.மு.க கூட்டணி வைக்க வேண்டும் என ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்களிடம் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததும், பதவி பறிப்புக்கு காரணமாக டெல்லி பா.ஜ.க தலைவர்கள் சந்தேகப்படுகின்றனர்.

இளங்கோவனுக்கு நெருக்கமான டெல்லி பா.ஜ.க. தலைவர்கள் தொலைபேசியில் அவரைத் தொடர்பு கொண்டு துக்கம் விசாரிப்பது போன்று, பதவி நீக்க விவகாரம் குறித்துப் பேசுகிறார்களாம்.

சுதந்திரத்திற்குப் பிறகு ஆட்சி புரிந்த 16 பிரதமர்களுக்கு மரியாதை செய்யும் நோக்கில், டெல்லியில் நினைவகம் ஒன்றை அமைக்க அடிக்கல் நாட்டியுள்ளார் பிரதமர் மோடி. முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு நினைவக வளாகத்தில் அமைக்கப்படவுள்ள இந்த நினைவகத்தில் தேவகவுடா, மன்மோகன்சிங் உள்பட 16 பேரின் சிலைகள் வைப்பதுடன், அவர்களின் புத்தகங்கள், நாடாளுமன்றப் பேச்சுகள் உள்ளிட்ட அனைத்தும் டிஜிட்டல் மயமாகப் கிடைக்குமாம். கூடவே பிரதமர் மோடிக்கு அங்கு ஓர் அரங்கு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாம்.





மோடியின் இந்தச் செயலைக் கிண்டலடிக்கும் காங்கிரஸ், மத்தியில் மீண்டும் பா.ஜ.க ஆட்சிக்கு வராதது என்பது மோடிக்கே தெரிந்துவிட்டது. அதனால்தான் முன்னாள் பிரதமர்கள் வரிசையில் தனக்கும் சிலையும் நினைவகமும் அமைக்க அவசரம் காட்டுகிறார் என்கிறார்கள்.

ஆனால், பா.ஜ.க தரப்போ, நேருவுக்கு மட்டும் ஸ்பெலாக இருந்த நினைவகத்தை மற்ற பிரதமர்களுக்கும் பங்கு போட்டுக் கொடுத்து வரலாற்றில் அழியாப் புகழைப் பெறுவதுதான் மோடியின் சூட்சமம் என்கின்றனர்.



தமிழக காங்கிரஸ் தலைவராக உள்ள திருநாவுக்கரசரை மாற்றக் கோரி, அக்கட்சியின் முன்னாள் தலைவர்கள் ஒருபக்கம போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில், நடிகை குஷ்பு, விஜயதரணி எம்.எல்.ஏ. கரூர் ஜோதிமணி உள்ளிட்ட முக்கிய பெண் நிர்வாகிகள் அடிக்கடி டெல்லிக்கு படையெடுக்கிறார்கள்.



டெல்லியில் முகாமிட்டு காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்து திருநாவுக்கரசருக்கு எதிராக புகார் வாசிக்கிறார்களாம். ஆனால், திருநாவுக்கரசரை மாற்றும் எண்ணம் ராகுலுக்கு இல்லை எனக் கூறிய பிறகும், இவர்கள் ஏன் டெல்லிக்கு வருகிறார்கள் எனக் கோபப்படுகிறாராம் தமிழக பொறுப்பாளர் முகுல் வாஸ்னிக். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக அரசரை மாற்றவில்லையெனில் குஷ்புவும் விஜயதரணியும் கட்சி மாறும் எண்ணத்திற்கு வந்து விட்டார்களாம். முன்னவர் ரஜினி கட்சிக்கும் பின்னவர் தினகரன் தாவலாம் என டெல்லியில் பேச்சு அடிபடுகிறது.

நக்கீரன் கோபால் கைது விஷயத்தில், சென்னை போலீஸ் சொதப்பிவிட்டதாக நினைக்கிறதாம் கவர்னர் மாளிகை. ராஜ் பவனில் பர்னீச்சர்கள் வாங்கியதில் ஊழல் நடந்ததாக முன்பு ஒரு விவகாரம் போலீஸ்க்குப் போனது. அப்போது, கவர்னர் மாளிகை பணியில் இருந்த உயர் அதிகாரிகள் இருவர் மீதும் கடுமையாக புகார் கூறப்பட்டது. அந்த இருவர் மீதும் கைது நடவடிக்கையைப் பாய்ச்சச் சொன்னார்களாம் அப்போது. ஆனால், உயர் அதிகாரிகளை விட்டுவிட்டு, சாதாரண ஊழியர்களை மட்டும் கைதுசெய்தது போலீஸார்.

இதையெல்லாம் வைத்து, கவர்னர் மாளிகைக்கு எதிராகவே சென்னை போலீஸ் செயல்படுகிறது என்ற முடிவுக்கு வந்துள்ளனராம் கவர்னர் மாளிகை அதிகாரிகள் சிலர். அதனால், சென்னை மாநகர போலீஸ் உயர் அதிகாரிகளை கூண்டோடு மாற்ற வேண்டும் என்று ராஜ் பவன் வட்டாரம் நினைக்கிறதாம். இந்த நேரம் பார்த்து, சென்னை போலீஸ் கமினர் ஏ.கே.விஸ்வநாதன் இரண்டு நாள்கள் விடுமுறையில் செல்ல, அவரை லீவில் போகச் சொல்லிவிட்டார்கள் என்கிற ரீதியில் வதந்தி பரவி பரபரப்பைக் கிளப்பிவிட்டது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் சிலையை நவம்பர் 15-ம் தேதி திறக்க உள்ளனர். இதைத் திறந்துவைக்க சோனியா காந்தியைக் கூப்பிட உள்ளார்களாம். விழாவில் பங்கேற்க தேசியத் தலைவர்கள் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றக் கூட்டணிக்கு அச்சாரம் போடும் வகையில் இந்த நிகழ்ச்சி இருக்கும் என்று கூறுகின்றனர் தி.மு.கவினர். ஆனால், உடல்நிலை காரணமாக இந்த நிகழ்வில் சோனியா பங்கேற்பது சந்தேகம்தான் என்கிறார்கள் காங்கிரஸ் தரப்பில். அநேகமாக ராகுல் காந்தி, மன்மோகன்சிங் இருவரும் பங்கேற்க வாய்ப்புள்ளது.

## பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தின் மோசடிகள்

பிரதமரின் புதிய வேளாண் காப்பீடு திட்டத்தை (Pradhan Mantri Fasal Bima yogana) ரூ.17,500 கோடியில் கர்நாடகா மாநிலம் பெலகாவில் 18.02.2016 அன்று பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். வழக்கம்போல் ஆரவாரமாக மிகப்பெரிய விளம்பரத்துடன் திட்டம் தொடங்கப்பட்டது. தனது வெற்றிகரமான திட்டங்களில் ஒன்றாக பிரதமர் மோடி தான் செல்லும் இடங்களில் எல்லாம் இந்த திட்டத்தின் பெருமைகளை பேசி வருகின்றனர். விவசாயிகளின் வாவேில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தி இருக்கிறது இந்த திட்டம் என் பெருமை கொள்கிறார். உண்மையில் இந்த பயிர் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு பயன்தந்திருக்கிறதா என்று தொடர்ந்து பலராலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டாலும் எதையும் காதில் வாங்காமல் இந்த திட்டம் பெரும் வெற்றி பெற்று விவசாயிகள் மகிசேச்சியாக இருக்கிறார்கள் என்று காட்டுவதில் அதிதீவிர முனைப்பு காட்டுகிறார் திருவாளர் மோடி. தோல்வியைக்கூட வெற்றியாக சித்தரிக்க தெரிந்த வாய்ச்சொல் வீரர் ஆயிற்றே அவர்.




புதிய காப்பீடு திட்டத்தை பிரதமர் மோடி அறிவித்தவுடன் மக்களிடம், குறிப்பாக விவசாயிகளிடம் பெரும் எதிர்பார்ப்பு உருவானது என்பதை மறுப்பதற்கில்லை. கரும்பு மற்றும் வாழைக்கு 5 சதவீதமும், கரிப் பருவத்தில் பயிரிடப்படும் உணவுப் பொருட்கள், எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட பயிர்களுக்கு 2 சதவீதமும், ராவி பருவத்தில் பயிரிப்படும் பயிர்களுக்கு 1.5 சதவீதமும் காப்பீடு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. வறட்சி, வெள்ளம், பூச்சித் தாக்குதல், விலங்குத் தாக்குதல் ஆகியவற்றால் பயிர்கள் அழிந்தால் உரிய இழப்பீடு வழங்கப்படும் என்றும் மொத்த பிரிமியம் தொகையில்

1.5 சதவீதம் முதல் 2 சதவீதம் வரை செலுத்தினால் போதுமானது என்றும் அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே கடுமையான வறட்சியினால் பெரும் பாதிப்பை சந்தித்து வந்த விவசாயிகள் இந்த புதிய காப்பீடுதிட்டத்தை தங்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாக கருதினார்கள். ஆனால் காலம் செல்லச் செல்ல இந்த திட்டத்தை பிரதமர் மோடி யாருக்காக தொடங்கினார், யார் இதனால் அதிக பலன்களை அடைகிறார்கள் என்பது வெளியே தெரிய ஆரம்பித்தது.

விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக முன்னாள் பிரதமர் வி.பி.சிங் ஆட்சி காலத்தில் வேளாண் காப்பீடு திட்டம் முதன் முதலாக கொண்டு வரப்பட்டது. அதற்காக வேளாண் காப்பீடு நிறுவனம் தொடங்கப்பட்டது. அதன் மூலம் விவசாயிகள் இழப்பீடுகளை பெற்று வந்தனர். பிரதமர் மோடி இந்த திட்டத்தை மேம்படுத்துகிறேன் என்ற போர்வையில் தனியார் காப்பீடு நிறுவனங்களை உள்ளே இழுத்து வி.பி. சிங் நல்ல நோக்கில் கொண்டு வந்த திட்டத்தை நாசம் செய்து விட்டார் என்று விவசாயிகள் புலம்புகிறார்கள்.

இந்த திட்டத்தில் நாடு முழுவதும் 3,31,96,239 விவசாயிகள் இணைக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் மட்டும் 15,37,000 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். விவசாயத்தில் ஏதோ ஒரு வகையில் பாதிப்பு ஏற்பட்டால் அரசு தரும் இழப்பீடு தாங்கள் செய்த முதலீட்டில் சிறிது அளவாவது கிடைக்கும் என்ற நப்பாசையில்தான் விவசாயிகள் இந்த திட்டத்தில் இணைகிறார்கள். ஆனால் விவசாயிகள் நம்ப வைத்து ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். விவசாயிகளின் பெயரில் விவசாயிகளின் நலனிற்காக என்று சொல்லி தொடங்கப்பட்ட இத்திட்டம் முழுவதும் காப்பீட்டு நிறுவனம் லாபம் கொழிக்க என்று உருமாற்றம் பெற்றது.

புதிய காப்பீடு திட்டத்தில் 17 காப்பீட்டு நிறுவனங்கள் இணைந்திருக்கின்றன. இதில் 5 மட்டுமே பொதுத்துறை நிறுவனங்களாகும். மீதியுள்ள 12 நிறுவனங்களும் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள். இவர்கள்தான் இந்த இந்த திட்டத்தை வைத்து தங்களை வளர்த்துக் கொள்கிறார்கள்.

பயிர் காப்பீடு திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு தற்போது காப்பீடு நிறுவனங்களின் லாபம் 85% உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. விவசாயிகளின் பணத்தையும், அரசின் மூலம் மக்களின் வரிப் பணத்தையும் கபளீகரம் செய்து வருகின்றன காப்பீடு நிறுவனங்கள். கரிப் பருவத்தில் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு காப்பீடு பிரிமிய கட்டணம் ஒரு ஏக்கர் நெல்லுக்கு ரூ.503, துவரை, உளுந்து, பச்சைப்பயிருக்கு ரூ.260, நிலக்கடலைக்கு ரூ.432, கம்புக்கு ரூ.148, என்று நிர்ணயம் செய்து விவசாயிகள் இடமிருந்து பெற்றுக்கொள்ளும் நிறுவனம் விவசாயிகளுகுக்கு பாதிப்பு ஏற்படும் நிலையில் இழப்பீடு வழங்காமல் இருப்பது எவ்வகை நியாயம்? கடந்த ஆண்டிலிருந்தே இழப்பீடு தொகை பெறுவதற்கு பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள் விவசாயிகள். அவர்களுக்கு உரிய நியாயம் இன்னும் கிடைக்கவில்லை.

2016-2017 ம் நிதியாண்டில் குறுவை சாகுபடி காலத்தில் காப்பீடு நிறுவனங்கள் 44% லாபம் ஈட்டியுள்ளன. மொத்த வசூலான காப்பீடு பிரிமியம் தொகை ரூ.15,735 கோடி. ஆனால் விவசாயிகளுக்கு இழப்பீடாக வழங்கிய தொகை ரூ.8,862 கோடி மட்டும்தான்.

2017-2018 ம் நிதியாண்டிற்கான குறுவை சாகுபடிக்காக செலுத்தப்பட்ட பிரிமியம் தொகை ரூ.1,694 கோடி. இழப்பீடாக வழங்கப்பட்ட தொகை ரூ.69.93 கோடி மட்டுமே. பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா திட்டத்தின் கீ்ழ் காப்பீட்டு நிறுவனங்களுக்கு பயிர் காப்பீடு பிரிமியம் தொகையாக ரூ.17,796 கோடி செலுத்தப்பட்டது.

நிறுவனங்கள் இழப்பீடாக வழங்கிய தொகை ரூ.2,767 கோடி. நிறுவனங்களுக்கு கிடைத்த தொகை ரூ.15,029 கோடியாகும் என்று மத்திய வேளாண் அமைச்சகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயிர் காப்பீடு திட்டத்தின் மூலம் விவசாயிகளை விட காப்பீடு நிறுவனங்கள்தான் அதிக பலன்களை அடைந்திருக்கின்றன என்று மத்திய அமைச்சரே ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியிருக்கிறார்.

மத்திய அரசின் இந்த திட்டம் விவசாயிகளை வஞ்சிப்பதோடு நில்லாமல் தனியார் காப்பீடு நிறுவனங்களின் வளர்ச்சிக்காக பெரும் தகிடுதத்தங்களை செய்து வருவது கண்கூடாக தெரிகின்றது.

பிரதமர் மோடி கொண்டு வரும் அனைத்து திட்டங்களும் பெரு முதலாளிகளுக்கு ஆதரவாகவே நிற்கிறது. அதனால்தான் அவர் கார்ப்பரேட்களின் பிரதமர் என்று விமர்சிக்கப்படுகிறார்.



ஒரு மனிதனை அவனுக்கே தெரியாமல் பாலிசிதாரர் ஆக்கும் விந்தை உலகத்தில் வேறு எங்கும் நடந்திருக்காது என்று சமூக செயல்பாட்டாளர் யோகேந்திர யாதவ் இவற்றைத்தான் கூறியிருப்பார் போலும்.

மத்திய அரசின் பயிர் காப்பீடு திட்டம் மோசடியானது. பயிர் காப்பீடு திட்டத்தால் விவசாயிகளுக்கு பலனில்லை. தனியார் காப்பீடு நிறுவனங்களுக்கு மட்டுமே லாபம் என்று சில மாதங்களுக்கு முன்பு முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் குற்றஞ்சாட்டினார். அதற்கு இதுவரை அரசிடமிருந்து உரிய பதில் வரவில்லை. மாறாக புதிய பயிர் காப்பீடு திட்டத்தின் மூலம் பல்வேறு மோசடிகளும், ஊழல்களும் அனுமதினமும் அரங்கேறி, வெளிப்பட்டு வருகின்றன.

நாகை வருவாய் கிராமத்தில் அரசின் கணக்குப்படி நன்செய் பரப்பு 118 ஹெக்டேர்தான். அதில் 53 ஹெக்டேரில் 52 விவசாயிகள் சாகுபடி செய்திருக்கிறார்கள். அரசு உறுதிப்படுத்திய தகவல் இது. ஆனால் அப்பகுதியில் 260 ஹெக்டேரில் விவசாயம் செய்ததாக போலியாக ஆவணம் தயாரித்து அந்த கிராமத்தில் இல்லாத 170 நபர்களின் பெயர்களை சேர்த்து ஹிளழ ணூஜ ஷ்ழி புவிவிற்ஷெழிஜஉள என்ற காப்பீடு நிறுவனம் முறைகேடு செய்திருக்கிறது. அதுமட்டுமில்லாமல் விவசாயிகளுக்கு இழப்பீடு தருகிறோம் என்ற பெயரில் ரூ.3, ரூ. 5, ரூ.10, ரூ.48 காசோலை மூலமாக கொடுத்து பல இடங்களில் அவமானம் செய்திருக்கிறார்கள்.

ஹரியானைவைச் சேர்ந்த பன்சிலால் என்ற விவசாயியின் கிசான் கிரெடிட் கார்டிலிருந்து ரூ.2,480 எடுக்கப்பட்டு இருக்கிறத. அவர் என்ன விபரம் என்று அறிய சென்றபோது உனக்கு பயிர் காப்பீடு செய்திருக்கிறோம் என்று சொல்லிருக்கிறார்கள் அதிகாரிகள். பல இடங்களில் இதுபோன்று கட்டாயப் படுத்தி திட்டத்தில் இணைந்திருக்கிறார்கள். இதன் மூலம் விவசாயிகளின் பணத்தை நிர்பந்தப்படுத்தி தனியார் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளார்கள்.

பயிர் காப்பீடு திட்டத்தில் இணைந்தால் இழப்பை சந்திக்கும்போது அதற்குரிய இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்து விட்டு தற்போது அரசும், காப்பீடு நிறுவனங்களும் மாற்றி பேசுகின்றன. இவர்களின் நோக்கம் இழப்பீடு வழங்காமல் மொத்த பணத்தையும் சுருட்ட வேண்டும் என்பதே. அதற்காகத்தான் புதிய புதிய கொள்கைகளை வகுத்தும் இணைத்தும் வருகிறார்கள். மத்திய அரசும், காப்பீடு நிறுவனங்களும் சேர்ந்து வகுத்திருக்கும் கொள்கைபடி ஒரு வட்டாரத்தில் 70% பயிர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் மட்டும்தான் விவசாயிகளுக்கு காப்பீடு தர முடியும் என்று மத்திய அரசு கூறுகிறது.

உதாரணத்திற்கு 1000 ஏக்கர் இருக்கும் இடத்தில் 700 ஏக்கர் பாதிக்கப்பட்டால் மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் இவர்களின் கூற்றுப்படி. 300 ஏக்கர், 400 ஏக்கர், 600 ஏக்கர் வரை பாதிக்கப்பட்டால் கூட இழப்பீடு இல்லையாம். இது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்?

பிரதமரின் புதிய பயிர் காப்பீடு திட்டத்தில் நடைபெறும் மோசடிகளும், முறைகேடுகளும், ஊழல்களும் வெளிக்கொணரப்பட வேண்டும். இந்த வியத்தில் பெரும்பாலான ஊடகங்களும் அமைதி காப்பது விந்தையாக உள்ளது.

பயிர் காப்பீடு திட்டத்தில் இருந்து தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் உடனே வெளியேற்றப்பட வேண்டும். இழப்பீடுகளை வழங்காமல் சாமானிய மக்களை இமுத்தடிக்கும் நிறுவனங்களை தண்டிக்க வேண்டும். இவைகளை சாத்தியப்படுத்தாமல் இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகள் எந்த நன்மையையும் பெறமுடியாது. தனியார் காப்பீடு நிறுவனங்கள்தான் கொழுத்து நிற்கும்.



# தேர்தலை சந்திக்க அஞ்சும் ஆளும் கட்சி

## பிரேமலதா விஜயகாந்த்

தேமுதிக பொருளாளராக பிரேமலதா பதவியேற்ற பின்னர் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணியினரை அழைத்து ஒவ்வொரு நாளும் ஆலோசனை நடத்தி வருகிறார். அதே போன்று கட்சியின் விவசாய அணி நிர்வாகிகளுடன் சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் அவர் ஆலோசனை நடத்தினார்.

தேமுதிக தலைமை அலுவலகத்தில் கட்சியின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக விவசாய அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம். தேர்தலைச் சந்திக்க ஆளும் கட்சி பயப்படுகிறது என தேமுதிக பொருளாளர் பிரேமலதா குற்றஞ்சாட்டினார்.

முன்னதாக, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 111-ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு, கட்சி அலுவலகத்தில் வைக்கப் பட்டிருந்த அவருடைய படத்துக்கு பிரேமலதா மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் அளித்த பேட்டி:

தமிழகம் முழுவதும் டெங்கு, பன்றி காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகிறது. இதனால், அதிக எண்ணிக்கையிலான மக்கள் உயிரிழந்து வருகின்றனர். இதற்கு முக்கியக் காரணம், சென்னையில் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் தெருக்களில் ஆங்காங்க கொட்டப்பட்டிருக்கும் குப்பைகள் அகற்றப்படாததும், சாலைகளில் பல்வேறு காரணங்களுக்காகத் தோண்டப்படும் குழிகள் சரிவர மூடப்படாததுமே ஆகும். பருவ மழைக் காலம் தொடங்கி விட்ட நிலையில், தொடர் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இந்தச் சூழலில் பருவ மழையைச் சந்திக்க தமிழகம் தயாராக இருக்கிறதா என்பதே மிகப் பெரிய கேள்விக்குறிதான்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 சட்டப் பேரவை உறுப்பினர்களின் தொகுதிகளுக்கு இன்னும் 6 மாதங்களில் தேர்தல் நடத்தப்படும் என ஆட்சியாளர்கள் அறிவிக்கின்றனர். ஆனால், கடந்த ஓராண்டாகவே அந்தத்

தொகுதிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால், எந்தவொரு வளர்ச்சிப் பணிகளும் அங்கு மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில், அந்தத் தொகுதிகளுக்கு தேர்தல் நடத்த மேலும் 6 மாதங்கள் என்று அறிவிப்பது, தேர்தலைச் சந்திக்க ஆளும் கட்சி பயப்படுவதையே இது காட்டுகிறது. ஏற்கெனவே, உள்ளாட்சித் தேர்தலை ஏன் நடத்தவில்லை என்பதற்கே ஆட்சியாளர்களிடம் பதில் இல்லை.

மணல் கொள்ளை, குவாரிகளுக்காக மலைகள் அழிப்பு என தமிழக வளங்கள் அனைத்தும் சுரண்டப்படுகின்றன. விவசாயிகள் பிரச்னை எதுவும் தீர்க்கப்படவில்லை. இந்த நிலைகள் அனைத்தும் மாறி, இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் மேம்பட, நன்கு சிந்தித்து வரும் தேர்தலில் நல்ல முடிவை மக்கள் தர வேண்டும்.

இப்போது காலியாக இருக்கும் 20 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் தேர்தல் மட்டுமின்றி எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும், அதைச் சந்திக்க தேமுதிக தயாராக உள்ளது. எந்தெந்தக் கட்சிகளுடன் தேமுதிக கூட்டணி வைக்கும் என்பது தேர்தல் நேரத்தில் முடிவு செய்யப்பட்டு, கட்சியின் தலைவர் விஜயகாந்த் அதனை அறிவிப்பார்.

18 சட்டப்பேரவை உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்த அதிமுக அரசு, அரசுக்கு எதிராக வாக்களித்த ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட 11 சட்டப்பேரவை உறுப்பினர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்காதது ஏன்? எனவே, இந்த 11 பேரையும் தகுதி நீக்கம் செய்வதுதான் ஜனநாயக நீதி.

இலங்கையில் தமிழர்களின் படுகொலைக்குக் காரணமான முன்னாள் அதிபர் ராஜபட்ச, அந்நாட்டின் பிரதமராகப் பதவியேற்றிருப்பது மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. குறுக்கு வழியில் அவர் பதவியேற்றுள்ளதற்கு தேமுதிக கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. அங்குள்ள தமிழ் மக்களைக் பாதுகாக்கவும், காப்பாற்றவும் உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்க வேண்டும்.



**N. அன்பழகன்**
இணை ஆசிரியர்



**கிருஷ்ணகிரி மாவட்டம் ஆட்சியாளர் திரு. பிரபாகரன் அவர்களை சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் (மனித உரிமைகள் மீட்பு இதழின்) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம். ஆனந்தி, உறுப்பினர்கள் எம்.ரமேஷ், ஜீவா, சுகந்தி, லோகப்பிரியா, நகர தலைவர் ஆறுமுகம், ஸ்ரீதர் ஆகியோர் நேரில் சந்தித்து மனித உரிமைகள் மீட்பு இதழினை வழங்கினார்கள்.**

மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்ட்ரா மாநிலங்களில் வாழும் பழங்குடி இனம்தான் பார்தி சத்ரபதி சிவாஜி தனது வெளிவட்டப் பாதையில் நிறுத்தியிருந்த காவல் படையினர், பார்தி இனத்தவர்தான். இவர்களை எதிர்த்த மன்னர்கள் தாக்குப்பிடிக்க முடியாமல் திணறினார்களாம். பார்திகளை எதிர்த்துப் போரிட ராஜஸ்தான் மாநில மலைப்பாங்கான பகுதியைச் சேர்ந்த இன்னொரு கும்பலை சில மன்னர்கள் ரெடி செய்தனர். இதன் பெயர், பவாரியா கும்பல். மன்னர்கள் காலத்தில் பயன்படுத்தப்பட்ட இவர்கள், பிற்காலத்தில் பிழைப்புக்கு வழி தெரியாமல் கொள்ளையடிப்பதில் இறங்கினர். பிரிட்டிஷார் காலத்தில் குற்றப்பரம்பரையினராக அறிவிக்கப்பட்ட இனங்களில் பார்தியும் ஒன்று.

சுதந்திரத்துக்குப் பிறகு இவர்களில் பலர் மாறிவிட்டாலும், மத்தியப் பிரதேசத்தின் மலைப் பகுதிகளில் வாகேற சில குழுவினர் மட்டும் இன்னமும் கொள்ளையைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இந்தக் கும்பலில் குழந்தை பிறந்தால், சிசுவின் பின்பக்கத்தில் சிறு குச்சியால் அடிக்க ஆரம்பிப்பார்களாம். வயது ஆக ஆக குச்சி, பிரம்பு என்று அளவு மாறுமாம்.


எதிர்காலத்தில் போலீஸ் தடியடி வலிக்காமல் இருப்பதற்காகவே இந்த முன்னேற்பாடாம். வேறு சில கொள்ளை கும்பலும் வட மாநிலங்களில் பல பகுதிகளில் உள்ளனர். இவர்கள் இந்தியாவின் பல மாநிலங்களில் போய் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகிறார்கள். பவாரியா கும்பல் தனியாக உள்ள வீடுகளில் புகுந்து கதவைத் தட்டுவார்கள்.

கதவைத் திறந்தும் எதிர்ப்படுவோரின் தலையில் கட்டையால் தாக்கி ரத்தக்களறி ஆக்கிவிட்டுக் கொள்ளை அடிப்பார்கள். ஆனால், பார்தி கும்பல் தனியாக இருக்கும் வீடுகளை அட்டாக் செய்வது, தேசிய நெடுஞ்சாலைகளில் கொள்ளைகளில் ஈடுபடுவது எனக் கன்னம் வைத்துக் காரியத்தில் இறங்கு கிறவர்கள். எதிர்ப்படுகிறவர்களைக் கண்மூடித் தனமாகத் தாக்கமாட்டார்கள். பயங்கரமாக நெட்வொர்க் ஏற்படுத்தி, நிதானமாகத் தகவல் சேகரித்து, கனகச்சிதமாக ஸ்கெட்ச் போட்டுக் கொள்ளையடிப்பார்கள். அப்படித்தான், 2016-ம் ஆண்டு ஆகஸ்டு 8-ம் தேதி சேலம்- சென்னை ரயிலின் கூரையில் ஓட்டை போட்டு 5.78 கோடி ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர். இரண்டு ஆண்டுகள் கழித்து இந்தக் கொள்ளை தொடர்பான பிரேக்கிங் நியூஸ் கிடைத்திருக்கிறது.

சேலத்திலிருந்து விருத்தாசலம் வழியாக சென்னை எழும்பூர் வரும் ரயில், சேலத்திலிருந்து விருத்தாசலம் வரை மின்மயமாக்கப்படாத பாதையில் வருகிறது. அங்குதான் போலீஸ் கணித்தது. இதில் சின்ன சேலத்திலிருந்து விருத்தாசலம் வரை இடையில் எங்கும் நிற்காமல் ஒரு மணி நேரத்துக்கும் மேல் ரயில் பயணிக்கிறது. எனவே, சின்னசேலத்தில் கூரையில் ஏறி, ஓட்டை போட்டுப் பணத்தை எடுத்துக் கொண்டு விருத்தாசலத்தில் இறங்கியிருக்க வேண்டும் என முடிவு செய்தார்கள்.

இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி போலீஸார் சவாலாக எடுத்து விசாரித்தனர். விருத்தாசலம் ஜங்ன் அருகேயுள்ள செல்போன் டவரில் கொள்ளை நடந்த நேரத்தில் கிடைத்த செல்போன் சிக்னல்களை வைத்து அடுத்தகட்ட விசாரணையில் இறங்கினர். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய அதிகாரிகள் உதவியுடன்







அந்த செல்போன் க்ளுவை ஆராய்ந்தபோது, அது மத்தியப் பிரதேச மாநிலம் குணா மாவட்டம் அருகே காட்டியது.

ரயிலில் கொள்ளை நடந்த நாட்களில், அங்கே மோஹர் சிங் தலைமையிலான கொள்ளை கோஷ்டியைச் சேர்ந்த சிலர் ஊரில் இல்லை என்று தெரியவந்தது. மோஹர் சிங் தற்போது மத்தியப்பிரதேச சிறையில் இருக்கிறார். இருந்தாலும் அவரின் ஆலோசனையோடுதான் அவர் கோஷ்டியினர் வெளி மாநிலங்களுக்குப்போய் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவது தெரிந்தது.

அதை வைத்து, ரட்லம் என்ற பகுதியைச் சேர்ந்த தினேஷ் பார்தி, ரோஹன் பார்தி என இரண்டு பேரை சி.பி.சி.ஐ.டி போலீசார் கைது செய்தனர். இவர்களின் கைரேகைகள், ரயில் கொள்ளை சம்பவம் நடந்த இடத்தில் கிடைத்த கைரேகைகளுடன் ஒத்துப்போயின. இவர்களுடன் சம்பவத்தில் ஈடுபட்ட ஒரு டஜன் பேரைத் தேடிக்கொண்டிருக்கிறது காவல்துறை.

வடக்கு மண்டல ஐ.ஜி-யான ஸ்ரீதர், வட மாநிலங்களில் முகாமிட்டு ரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். ஓரிரு நாள்கள் பொறுங்கள். முழு விவரங்களைச் சொல்கிறேன் என்று மட்டும் சொன்னார் ஸ்ரீதர்.

சில மாதங்களுக்கு முன்பு திருவள்ளூரில் ஆடிட்டர் ராமச்சந்திரன் வீட்டில் நள்ளிரவில் புகுந்து அவரைக் கட்டிப்போட்டுவிட்டு, 150 சவரன் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றது ஒரு கும்பல். கொள்ளையில் ஈடுபட்டது பார்தி கும்பல்தான் என்பதை சில க்ளுக்களை வைத்து இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் கண்டுபிடித்தார். கொள்ளையர்களைத் தேடிப்போய் மூன்று பேரைப் பிடித்து வந்தார். மற்ற கொள்ளையர்களையும் பிடிக்கப் போராடி வருகிறார் வெங்கடேசன்.

தமிழகத்தில் பல்வேறு கொள்ளை சம்பவங்களைக் கொடூரமாக அரங்கேற்றிய பவாரியா கும்பலைத் தேடிப்போய் இரண்டு வருடங்கள் ரகசிய நடவடிக்கைகள் எடுத்து அப்போதைய வடக்கு மண்டல ஐ.ஜி யான ஜாங்கிட் கைது செய்தார். அதன்பிறகு 11 வருடங்கள் பவாரியா கும்பல் தமிழகம் பக்கமே தலைகாட்டவில்லை. 2016-ம் வருடத்துக்குப் பிறகு, மேற்படி கும்பல் உள்ளிட்ட பல கேங்குகள் தமிழகத்தில் உலாவர ஆரம்பித்துள்ளன.

## தமிழகம் விழித்துக் கொள்வது நல்லது

தமிழக முதல்வருக்கு 10 ஆண்டுகள் வரை தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது. சி.பி.ஐ.பிடியில் முதல்வர் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நீதிமன்றம் எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. ஆனால், வெளிப்படையான, நடுநிலையான, நியாயமான விசாரணையே நீதியை நிலைநாட்டும் என்று தீர்ப்பை வாசித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெகதீஷ் சந்திரா, தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி மீதான டெண்டர் புகாரை சி.பி.ஐ விசாரிக்க வேண்டும் என உத்தரவிட்டார். அந்த நிமிடத்திலிருந்து தமிழக அரசியலில் பெரும் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் வசம் இருக்கும் நெடுஞ்சாலைத் துறையில் விடப்பட்ட ஐந்து டெண்டர்களை வைத்து அவரை கார்னர் செய்தது.

தி.மு.க இதை உயர் நீதிமன்றத்துக்கு வழக்காக எடுத்துச் சென்ற தி.மு.க.வே சுதந்திரமான ஒரு விசாரணைக்குழு இதை விசாரிக்க வேண்டும் என்றுதான் கேட்டது. சி.பி.ஐ விசாரணை என்பது அவர்களே எதிர்பார்க்காத ஜாக்பாட் தமிழக அரசின் ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு துறை, ஒரு வாரத்துக்குள் இந்த வழக்கு தொடர்பான



ஆவணங்களை சி.பி.ஐ தென் மண்டல இணை இயக்குநரிடம் ஒப்படைக்க வேண்டும். எஸ்.பி. அந்தஸ்தில் இருக்கும் ஓர் அதிகாரியை வைத்து அவர் முதல்கட்ட விசாரணையை மூன்று மாதங்களுக்குள் நடத்தி முடிக்க வேண்டும்.

புகாரில் முகாந்திரம் இருந்தால், அதன்பிறகு வழக்குப்பதிவு செய்யலாம் என்கிறது இந்தத் தீர்ப்பு. நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்தம் முறைகேடு தொடர்பான புகார், நெடுங்காலமாக எடப்பாடியின் காலைச் சுற்றிக் கொண்டிருக்கிறத. பதவியில் இருக்கும் ஒரு முதல்வர் மீது சி.பி.ஐ விசாரணை என்ற அரிதான பெருமையையும் இப்போது அவருக்குக் கொடுத்திருக்கிறது.

கடந்த ஜுன் 13-ம் தேதி ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் தி.மு.க அமைப்புச் செயலாளரான ஆர்.எஸ்.பாரதி இது பற்றிப் புகார் அளித்தார். அதன் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. அதைத் தொடர்ந்து, ஜுலை 23-ம் தேதி கவர்னர் பன்வாரிலால் புரோஹித்திடம் எதிர்க்கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலின் புகார் கொடுத்தார். அதன் மீதும் நடவடிக்கை இல்லை.

அடுத்ததாக, ஆர்.எஸ்.பாரதி, முதல்வருக்கு எதிராக நான் கொடுத்த புகாரில் ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, நீதிமன்றத்தின் மேற்பார்வையில் சுதந்திரமான முறையில் விசாரணை செய்யக்கூடிய வகையில் ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று கேட்டு ஆகஸ்ட் 24-ம் தேதி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு செய்தார். அந்த மனுமீதுதான், சி.பி.ஐ விசாரணை உத்தரவிடப்பட்டுள்ளது.

இது குறித்து ஆர்.எஸ்.பாரதி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோவிடம் பேசினோம். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் (டி.வி.ஏ.சி) நாங்கள் கொடுத்த மனுமீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டோம். அப்போது டி.ஏ.வி.சி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ஆரம்ப கட்ட விசாரணையைத் தொடங்கிவிட்டோம். நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்தங்களில் எந்தத் தவறும் நடக்கவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் இப்படிச் சொன்னதால், இந்த வழக்கில் நியாயமான விசாரணை நடக்க வாய்ப்பில்லை என்று எங்களுக்குப் புரிந்தது. எனவேதான் விசாரணைக்குழு அமைக்க வேண்டும் என்று கேட்டோம். அதனால், இந்த வழக்கில் சி.பி.ஐ விசாரணைக்கு நீதிபதி உத்தரவிட்டிருக்கிறார். ஒரு வழக்கை சி.பி.ஐ விசாரணை செய்தால்தான் நியாயம் கிடைக்கும் என்று நீதிமன்றம் கருதினால், மாநில அரசு உட்பட யாரையும் கேட்காமல், அந்த வழக்கை சி.பி.ஐ -க்கு மாற்றலாம் என்று உச்ச நீதிமன்றம் ஏற்கனவே கூறியுள்ளது.

நெடுஞ்சாலைத்துறை டெண்டர் விவகாரத்தைப் பொறுத்தவரை, அந்தத் துறையை கையில் வைத்துள்ள முதல்வர் பழனிசாமிக்கு நூறு சதவிகிதம் தொடர்பு உள்ளது.

டெண்டருக்கான மூன்று கமிட்டிகளில் முதலாவது கமிட்டி அதிகாரம் அளிக்கும் கமிட்டி (EMPOWERED COMMITTEE). இந்த கமிட்டிக்கு எடப்பாடி பழனிசாமிதான் தலைவர். இந்த கமிட்டிக்கு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் தான் தலைவராக இருக்க வேண்டும் என்று உலக வங்கியே நிபந்தனை விதித்துள்ளது. அதன்படிதான் அவர் தலைவராக உள்ளார்.

உலக வங்கி நிதியில் செயல்படுத்தப்படும் நெடுஞ்சாலைத்துறை திட்டங்களுக்கான டெண்டர் நடைமுறையில், அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் நெருங்கிய, தொழில் அல்லது குடும்பத்தொடர்பு இருப்பவர்கள் பங்கேற்கக் கூடாது என்ற விதி இருக்கிறது. இது மீறப்பட்டுள்ளது என நீதிமன்றத்தில் வாதங்களை வைத்தோம். இப்படி டெண்டர் தரப்பட்டது, இந்திய குற்றவியல் தண்டனை சட்டம் பிரிவு 409- ன் கீழ் தண்டனைக்கு உரியது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆயுள் தண்டனைகூட தரப்படலாம். இது, ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவும் தகுதியான வழக்கு என்றார்.

இது சம்மந்தமாக மதுரை வழக்கறிஞர் மகாலெட்சுமியிடம் கருத்து கேட்டபோது இந்த வழக்கு தமிழக முதல்வர் மீது ஆதாரத்துடன் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா போன்று தற்போதைய முதல்வரும் எதிர்காலத்தில் கம்பி எண்ணுவார்கள் என்று முடித்துக் கொண்டார். நாமும் பொருத்து இருந்து பார்ப்போம்.



**A. பிரபாகரன்**
*இணை ஆசிரியர்*



# நிர்மலாதேவிக்கு ஏன் ஜாமீன் இல்லை?

## குழம்பும் வழக்கறிஞர்கள்

அருப்புக்கோட்டையில் உள்ள தனியார் கல்லூரி மாணவிகளைத் தவறாக வழி நடத்த முயற்சி செய்த வழக்கில், பேராசிரியை நிர்மலாதேவி கடந்த ஏப்ரல் 16-ம் தேதி கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு மாற்றப்பட்டு, எஸ்.பி.ராஜேஸ்வரி தலைமையிலான டீம் விசாரித்தது. நூற்றுக்கும் மேற்பட்டோர் விசாரிக்கப்பட்ட நிலையில், நிர்மலாதேவியுடன் சேர்ந்து கூட்டுச்சதி செய்ததாக மதுரை காமராசர் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முருகன், ஆய்வு மாணவர் கருப்பசாமி ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர். பெரிய தலைகள் உருளும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்த வழக்கில், இந்த மூன்று பேருடன் மட்டும் வழக்கு முடிக்கப்பட்டுக் குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நடைபெறும் விருதுநகர் நீதிமன்றத்தில் ஜாமின் கேட்டு மூவரும் தொடர்ச்சியாக மனு செய்தனர். ஆனால், எல்லா மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையிலும் இவர்களின் ஜாமின் மனுக்கள் இப்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. கூடவே, வழக்கை விரைவாக நடத்தி ஆறு மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், முருகனின் மனைவி சுஜாவிடம் பேசினோம். தவறு செய்யாமல் என் கணவர் தண்டனை அனுபவிப்பது எனக்குப் பெரும் வேதனையாக இருக்கிறது. இதனால், கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். நான் தூங்கியே வெகு நாள்களாகிவிட்டன என்று வேதனையுடன் பேசத் தொடங்கிய சுஜா, பலமுறை ஜாமீன் கேட்டும் கிடைக்கவில்லை. ஜாமீன் மனு விசாரணையின் போது சி.பி.சி.ஐ.டி யிடம் முருகன் பெயரைக் கல்லூரி மாணவிகள் கூறினார்களா, முருகன் இந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறாரா என்று நீதிபதி கேட்டதற்கு, அவர்களிடம் எந்தப் பதிலும் இல்லை. இப்படி எந்த ஓர் ஆதாரமும் அவர்களிடம் இல்லை. என் கணவரை ஏன் இன்னும் சிறையில் வைத்துள்ளார்கள் என்று தெரியவில்லை. குற்றவாளியைப் பிடித்துவிட்டோம் என்று காட்டுவதற்காக இவ்வாறு செய்கிறார்களா என்றும் தெரியவில்லை.

கொலைக் குற்றம் செய்தவர்களுக்குக்கூட விரைவில் ஜாமீன் கிடைத்து விடுகிறது. ஆனால், ஒரு தவறும் செய்யாத என் கணவருக்கு ஜாமீன் கிடைக்கவில்லை. இதன் பின்னால் பெரிய சதி உள்ளது. அதனால்தான் ஜாமீன் கிடைக்கவில்லை என்று பலரும் என்னிடம் சொல்கின்றனர். பணம், பதவி, அதிகாரம் கொண்டவர்களைக் காப்பாற்ற என் கணவர்தான் பலிகடாவா? என் கணவர் தவறு செய்திருந்தால் இப்படி வெளிப்படையாக நான் பேச மாட்டேன். கோவையில் புனிதா என்பவர் இதே போன்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டார். அவருக்கு உடனே ஜாமீன் கிடைத்துவிட்டது.

திருண்ணாமலையில் கல்லூரி மாணவி ஒருவர் நேரடியாக பேராசிரியர் மீது குற்றம் சாட்டினார். அவரை இதுவரை கைதுகூட செய்யவில்லை. ஆனால், தவறே செய்யாத என் கணவர் உள்ளிட்டவர்களுக்கு ஜாமீன் மறுக்கப் படுகிறது. உச்ச நீதிமன்றம் சென்று நீதி கேட்கப் போகிறேன் என்றார்.



**K. மதுசூதனன்**
*கௌரவ துணை ஆசிரியர்*



# தமிழகத்தில் ஹைட்ரோகார்பன் திட்டங்களை ரத்து செய்ய வேண்டும்

## அன்புமணி ராமதாஸ்

பாறை எரிவாயு உள்ளிட்ட ஹைட்ரோ கார்பன் திட்டங்களைச் செயல்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துகளை உணர்ந்து அத்திட்டங்களை ரத்து செய்ய வேண்டும் என, பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அன்புமணி ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில்,

“இங்கிலாந்து நாட்டின் லங்காஷையர் மாவட்டத்திலுள்ள லிட்டில் பிளம்ப்டன் நகரில் பாறை எரிவாயு எடுப்பதற்காக பூமியைத் துளையிட்டபோது அப்பகுதியில் நில அதிர்வு ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. காவிரி டெல்டாவில் அடுத் தடுத்து ஹைட்ரோகார்பன் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வரும் நிலையில் இச்செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

இங்கிலாந்தின் லிட்டில் பிளம்ப்டன் பகுதியில் பாறை எரிவாயுத் திட்டங்களை செயல்படுத்த அந்நாட்டு அரசு தீர்மானித்தது. இதற்கு எதிராக அப்பகுதி மக்கள் கடுமையான போராட்டங்களை நடத்தியதுடன், நீதிமன்றத்தில் வழக்குகளையும் தொடர்ந்தனர். நீண்ட சட்டப் போராட்டத்திற்கு பிறகு அந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட நிலையில் கடந்த அக்டோபர் 15 ஆம் தேதி முதல் பிளம்ப்டன் பகுதியில் பாறை எரிவாயு எடுப்பதற்காக பூமியைத் துளையிடும் பணிகள் தொடங்கின.

அதன்பின் கடந்த ஐந்து நாட்களில் அப்பகுதியில் நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. முதலில் கடந்த 26 ஆம் தேதி வெள்ளிக் கிழமையும், அதன்பின்னர் 27 ஆம் தேதி சனிக் கிழமையும் தலா 0.80 ரிக்டர் அளவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது. தொடர்ந்து 29 ஆம் தேதி திங்கள்கிழமை 1.10 ரிக்டர் அளவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் ஏற்பட்ட பதற்றத்தைத் தொடர்ந்து அங்கு துளையிடும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

1.10 ரிக்டர் அளவுள்ள நிலநடுக்கத்தால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது என்பது உண்மை தான். ஆனால், அதிக இடங்களில் துளையிடும் பணிகள் தீவிரப்படுத்தப்படும் போது நிலநடுக்கத்தின் வீரியம் அதிகரிக்காது

என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இங்கிலாந்தில் இந்த அளவுக்கு நில அதிர்வு ஏற்பட்டுள்ள நிலையில், இரு ஆண்டுகளுக்கு முன் 2016 ஆம் ஆண்டில் கனடாவில் இதைவிட அதிக சக்திகொண்ட நிலநடுக்கம் ஏற்பட்டதும், அதைத் தொடர்ந்து அங்கு பாறை எரிவாயு எடுக்கும் திட்டங்கள் கைவிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டத்தால் ஏற்படும் ஆபத்தைக் கருதி தான் கடந்த அக்டோபர் 13 ஆம் தேதி உலகம் முழுவதும் பூமியை துளையிட்டு எரிவாயு எடுக்கும் முயற்சியை கண்டித்து சுற்றுச்சூழல் மற்றும் பசுமை அமைப்புகளின் சார்பில் அறப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆனால், இதையெல்லாம் உணராமல் காவிரி பாசன மாவட்டங்களில் 3 இடங்களில் ஹைட்ரோகார்பன் திட்டங்கள் செயல்படுத் தப்பட உள்ளன. ஓஎன்ஜிசி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தைக்கொண்டு நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் 85 கிராமங்களிலும், ஸ்டெர்லைட் தாமிர ஆலையை நடத்தும் வேதாந்தா குழுமத்துக்கு கடலில் 170 இடங்களிலும் ஹைட்ரோகார்பன் எடுக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

உயர்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளிலேயே இத்தகைய பாதிப்புகள் ஏற்படும் நிலையில், பழங்காலத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தமிழகத்தில் செயல்படுத்தப்படவுள்ள ஹைட்ரோகார்பன் திட்டங்களை நினைத் தாலே மிகவும் அச்சமாக உள்ளது.

இந்தியாவைத் தவிர்த்த பிறநாடுகளில் மக்கள்தொகை அடர்த்தி மிகவும் குறைவாகும். இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஹைட்ரோகார்பன் திட்டங்கள் செயல்படுத்தப்படும் பகுதிகளில் ஒரு குடியிருப் புக்கும், இன்னொரு குடியிருப்புக்கும் இடை யிலான தொலைவு மிகவும் அதிகம் ஆகும். அதனால் அங்கு நில நடுக்கம் ஏற்பட்டால் கூட பாதிப்புகள் மிகவும் குறைவாகவே இருக்கும். ஆனால், மக்கள் தொகை அடர்த்தி அதிகமுள்ள காவிரி பாசன மாவட்டங்களில் இத்தகைய பாதிப்புகள் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். காவிரி பாசன மாவட்டங்கள் பாலவனமாகிவிடும் ஆபத்தும் உள்ளன.

காவிரி பாசன மாவட்டங்களை பாதுகாக் கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வலியுறுத்தி காவிரி டெல்டா பகுதிகளில் கடந்த 3 நாட்களாக விழிப்புணர்வு பரப்புரை பயணத்தை மேற்கொண்டேன். நான் சந்தித்த லட்சக்கணக்கான மக்களில் ஒருவர் கூட அத்திட்டத்தை ஆதரிக்கவில்லை.



மாறாக, அனைத்து மக் களுமே ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் கைவிடப்பட வேண்டும்; காவிரி டெல்டா பகுதி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மாக அறிவிக்கப்பட வேண்டும் என்று தான் விரும்பு கின்றனர்.

பாறை எரிவாயு உள்ளிட்ட ஹைட்ரோகார்பன் திட்டங்களைச் செயல்படுத்து வதால் ஏற்படும் ஆபத்துகளை உணர்ந்தும், காவிரி டெல்டா மக்களின் உணர்வுகளை மதித்தும் தமிழகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து ஹைட்ரோகார்பன் திட்டங்களையும் ரத்து செய்ய வேண்டும். காவிரி டெல்டா பகுதிகளை பாதுகாக் கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



S. ரமேஷ்
உதவி ஆசிரியர்

எமனுடன் போராடிய

# ஏர் இந்தியா



திருச்சி விமான நிலையத்திலிருந்து 136 பயணிகளுடன் அக்டோபர் 12-ம் தேதி நள்ளிரவு 1.20 மணிக்கு துபாய்க்கு கிளம்பியது. ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம். அதில் பயணித்தவர்கள் உயிர் பிழைத்தது பெரும் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

8,136 அடி நீளமுள்ள திருச்சி விமான நிலைய ரன்வேயில் 5,500 அடி தூரம் தாண்டியதும் அந்த விமானம் டேக் ஆஃப் ஆகியிருக்க வேண்டும். அப்படி ஆகியிருந்தால், விமான நிலையச் சுற்றுச்சுவரைத் தாண்டும்போது, அந்த விமானம் தரையிலிருந்து 100 அடி உயரத்தில் இருந்திருக்கும். ஆனால், ரன்வேயின் எல்லைவரை வந்து விமானம் டேக் ஆஃப் ஆனது. விமான நிலையச் சுற்றுச்சுவரில் மோதி, அதில் இருந்த ஐ.எல்.எஸ் ஆன்டெனாவை உடைத்துக்கொண்டு, சுற்றுச்சுவரை அடுத்துள்ள புதுக்கோட்டை சாலையின் மேலே அது பறந்தபோது, தரையிலிருந்து வெறும் ஐந்தரை அடி உயரத்தில் இருந்தது. ஏதாவது பஸ்ஸோ, லாரியோ அப்போது அந்தச் சாலையில் போயிருந்தால் மிகப்பெரிய விபரீதம் நிகழ்ந்திருக்கும்.

விமானத்தை ஓட்டிய விமானி கணேஷ் பாபுவுக்கோ, பயணிகளுக்கோ விமானம் சுற்றுச்சுவரில் மோதியது தெரியவில்லை. சுற்றுச்சுவரில் மோதியதால் விமானத்தின் அடிப்பகுதியில் பலத்த சேதம் ஏற்பட்டு அந்த நிலையிலும் நான்கு மணி நேரம் அது பறந்தது. விமான நிலையக் கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் பேசியபோது, விமானத்தில் எந்த பாதிப்பும் இல்லை என பைலட் கணேஷ் பாபு சொன்னார். மும்பை அருகே கடல் தாண்டி பறந்தபோது, மும்பைக்குத் திரும்பச் சொல்லி உத்தர விட்டனர் அதிகாரிகள். மும்பையில் தரையிறங்கிய போதுதான், விமானத்தின் அடிப்பாகம் கிழிந்து பிளந்திருந்தது தெரியவந்தது. இவ்வளவு சேதமடைந்த ஒரு விமானம், நான்கு மணி நேரம் வானில் பறந்தது குறித்து நிபுணர்கள் ஆச்சர்யத்துடன் விவாதித்து வருகிறார்கள்.

இந்நிலையில் மிகக் குறைந்த நீளமுள்ள ஓடுதளத்தைக் கொண்ட திருச்சி விமான நிலையத்தை விரிவாக்கம் செய்யும் பணிகளில் காட்டப்படும் அலட்சியமும் தாமதமுமே இந்த விபத்துக்குக் காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. திருச்சி இன்ட்ரா சிட்டி டெவலப்மென்ட்ஸ் என்டியாவோர்ஸ் எனும் அமைப்பைச் சேர்ந்த ஜெகநாத், அலட்சியத்தால்தான் விபத்து நிகழ்ந்துள்ளது. இங்கு 12,500 அடி நீள

ரன்வே இருக்க வேண்டும். ஆனால், இதன் மொத்தமே நீளமே 8,136 அடிதான். அதிலும், விமான நிலையத்தை ஒட்டி சாலை இருப்பதால், 500 அடி பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. சேதமடைந்த விமானம், 35,000 அடி உயரத்தில், மணிக்கு 1,000 கி.மீ வேகத்தில் வானில் பறந்துள்ளது. அந்த நிலையில், விமானம் வெடித்துச் சிதறியிருக்கவும் வாய்ப்புள்ளது. நல்லவேளையாக அப்படி எதுவும் நடக்கவில்லை. திருச்சி விமான நிலையத்தில், ஆண்டுதோறும் 15 லட்சம் பயணிகள் வந்து போகிறார்கள். இது மற்ற விமான நிலையங்களை விட பல மடங்கு அதிகம். தற்போது திருச்சி விமான நிலையத்தில், புதிய டெர்மினல் கட்டுவதற்கு ரூ.930 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுடன், ஓடுதளப் பாதையையும் நீட்டிக்க வேண்டும். வளைகுடா நாடுகளுக்குச் செல்பவர்கள் அப்போதுதான் திருச்சி விமான நிலையத்தைப் பயன்படுத்த முடியும் என்றார்.

இந்திய விமானத்துறையின் ஆய்வாளரான உபைதுல்லாஹ் விமான ஓடுதளத்தின் நீளம் குறைவு என்பதால், பெரிய வகை விமானங்களை இயக்க முடியாத நிலை உள்ளது. அதனால், நேரோ பாடி, எனப்படும் சிறிய ரக விமானங்களை மட்டுமே திருச்சியில் இயக்க முடிகிறது. அந்த விமானங்களை இயக்கும்போதும், கொஞ்சம் கவனம் தவறினாலோ, தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டாலோ, எமர்ஜென்சி லேண்டிங் செய்வதிலும் சிக்கல் உள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக, இந்திய அளவில் அதிக வருமானம் தரும் விமான நிலையங்களில், திருச்சிதான் முதலிடத்தில் உள்ளது. திருச்சி விமான நிலைய ஓடுதள அளவை நீட்டிக்கத் தேவையான நிலம் கேட்டு, 10.01.2010 அன்றே தமிழக அரசுக்கு ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா கடிதம் அனுப்பியது. ஒன்பது வருடங்களாக அந்த ஃபைல் கிடப்பில் உள்ளது. இனியும் தாமதிக்காமல், தமிழக அரசு திருச்சி விமான நிலைய விரிவாக்கத்துக்கு நிலங்களைக் கையகப்படுத்தித் தரவேண்டும் என்றார்.



**A. விஜி**

*செய்தி துணை ஆசிரியர்*



# உலகை அதிரவைத்த கஷோகி கொலை!

கூட்டுக்குடும்பத்தில் அதிகம் சம்பாதித்துக்கொடுக்கும் பிள்ளை தப்பு செய்தால், அதைத் தட்டிக்கேட்க எல்லோருமே பயப்படுவார்கள். படுபயங்கரமான படுகொலையைச் செய்திருக்கும் சவுதி அரேபியாவை உலக நாடுகள் கண்டிக்கும் விதம் அப்படித்தான் இருக்கிறது. உலகின் எந்த நாட்டில் பிரச்சனை எழுந்தாலும், ஜனநாயப் படுகொலையைச் சகித்துக்கொள்ள முடியாது என அமெரிக்கா குரல் கொடுக்கும். ஐரோப்பிய நாடுகள் பின்பாட்டுப் பாடும். ஆனால், சவுதி இளவரசர் முகமது பின் சல்மானின் உத்தரவுப்படி, பத்திரிக்கையாளர் ஜமால் கஷோகி கொடூரமாகக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பது உறுதியாகியுள்ளது. ஆரம்பத்தில், சவுதி மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என மிரட்டிய அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், இப்போது பல்டி அடித்திருக்கிறார்.

உலகிலேயே அதிகம் ஆயுதங்கள் வாங்கும் நாடுகள் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருக்கிற சவுதி. அந்த நாட்டுக்கு ஆயுதங்கள் விற்பவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது அமெரிக்கா. அமெரிக்காவுடன் சவுதி செய்துள்ள பொருளாதார ஒப்பந்தங்களின் மதிப்பு ரூ.33 லட்சம் கோடி. அவர்கள் ஆயுதம் வாங்க மட்டுமே எட்டு லட்சம் கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போட்டுள்ளனர். அவர்கள் மீது பொருளாதாரத் தடை விதித்தால், அது சவுதியை விட அமெரிக்காவை அதிகம் பாதிக்கும். கிட்டத்தட்ட அமெரிக்காவில் பத்து லட்சம் பேர் வேலையிழக்கும் நிலை உருவாகும் என நியூயார்க் டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார் ஜனநாயகவாதி ட்ரம்ப்.

கச்சா எண்ணெய், ரியல் எஸ்டேட், டெக்னாலஜி என்று பல துறைகளில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளும் சவுதியுடன் ஒப்பந்தம் போட்டுள்ளன. இப்படி சவுதியின் பணத்தை நம்பியிருக்கும் நாடுகள், இப்போது ஒப்புக்கே கண்டிக்கின்றன.

அக்டோபர் 2-ம் தேதி, துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் இருக்கும் சவுதி தூதரகத்துக்கு தன் திருமணம் தொடர்பான ஆவணங்களைப் பெறுவதற்காகச் சென்றார் வாஷிங்டன் போஸ்ட் நாளேட்டின் பத்திரிக்கையாளர் ஜமால் கஷோகி. வெளியே அவரின் வருங்கால மனைவியான ஹேட்டிஸ் சென்ஜி வெகு நேரம் காத்திருந்தும்,





திரும்ப வரவேயில்லை கஷோகி. விசாரித்தபோது, கஷோகி திரும்பச் சென்றுவிட்டார் என்ற பதிலே கிடைத்தது. ஆனால் கஷோகி தூதரகத்துக்குள் வைத்துக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். சவுதி அரசுக்கு இதில் பங்கு உள்ளது.

கஷோகியின் விரல்களை வெட்டி, தலையைத் துண்டித்து, உடலைத் துண்டு துண்டாக்கிக் கழிவுநீர்க் கால்வாய் மூலம் வெளியேற்றினார் என சில ஆடியோ ஆதாரங்களை முன்வைத்துச் செய்திகள் பரவின. துருக்கி அரசும் இதை உறுதி செய்தது.

சவுதி மன்னர் குடும்பத்துக்கு நெருக்கமானவர் கஷோகி. பின்லேடனை பலமுறை பேட்டி எடுத்த பத்திரிக்கையாளர். சமீபகாலமாக சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மானின் சர்வாதிகாரப் போக்கால் சவுதியில் 15-க்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னர் குடும்ப விவகாரம் தொடர்பாகச் பேசிய பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அரச குடும்பத்துக்குள் நடந்த சில விவகாரங்களில் இளவரசருக்கு எதிரானவர்களுடன் ஜமால் நெருக்கமாக இருந்துள்ளார். இதைத் தொடர்ந்தே இளவரசர் உத்தரவின்படி ஜமால் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று சவுதி ஜனநாயகவாதிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆரம்பத்தில் இதை மொத்தமாக மறுத்தது சவுதி. ஆனால், ட்ரம்ப் விடுத்த முதல் எச்சரிக்கையைத் தொடர்ந்து சவுதியின் பங்குச்சந்தை இந்த ஆண்டின் மிகப்பெரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. சவுதி முதலீட்டாளர்கள் மாநாட்டைப் புறக்கணிப்பதாக மேற்கத்திய நாடுகளின் முக்கியத் தொழிலதிபர்கள் அறிவித்தனர். இந்த நெருக்கடிகளைத் தொடர்ந்து, கடந்த 20-ம் தேதி இதுகுறித்து அறிக்கை வெளியிட்ட சவுதி அரசு, சவுதி தூதரக அதிகாரிகளுக்கும் கஷோகிக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி கொலை நடந்துவிட்டது. கொலையில் சம்பந்த பட்டவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படும் என அறிவித்தது.

மேலும் கொலையில் தொடர்புள்ளதாக சவுதியின் உளவுப் பிரிவு துணைத்தலைவர் அஹ்மத் அல் அசிரி, அரசின் ஊடக ஆலோசகர் சவுத் அல்-கஹ்தானி ஆகியோர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கஷோகி படுகொலை மிக மோசமான தவறு என ஒப்புக்கொண்டிருக்கும் சவுதி வெளியுறவு அமைச்சர் அடேல் அல்-ஜுபேர், சவுதி பாதுகாப்புப்படை இதைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அவர் எப்படிக் கொலை செய்யப்பட்டார், அவரது உடல் எங்கே உள்ளது என்பது தெரியாது என்று சொல்லியிருக்கிறார்.

அரசியல் செல்வாக்கும், உயர்மட்டத் தொடர்புகளும் கொண்ட கஷோகிக்கே இந்த நிலைமையென்றால், இதர பத்திரிக்கையாளர்களின் நிலை என்ன என்கிற அச்சம் எழுந்துள்ளது.

2017-ல் மட்டும் உலகம் முழுவதும் 71 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். எல்லாவற்றுக்கும் உச்சமாக, உலகத்துக்கே அகிம்சையைப் போதித்த காந்தி பிறந்த நாளில் கஷோகி மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார். கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக அரசுகள் இதுபோன்ற ஒடுக்குமுறைகளைக் கையில் எடுத்தால், அதைவிட ஜனநாயகத்துக்குக் கேடான விஷயம் வேறு எதுவும் இருக்க முடியாது. என்ன பதில் சொல்லப் போகின்றன சவுதியின் நட்பு நாடுகள்?



**M. தனராஜ்**
*கௌரவ துணை ஆசிரியர்*

ஆன்லைன் மூலம் பொருட்கள் விற்பனை செய்வது அதிகரித்து வருகிறது. இதில் அத்தியாவசியமான பொருட்களான மருந்துப் பொருட்களும் ஆன்லைன் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதேபோன்று, பட்டாசுப் பொருட்களும் ஆன்லைனில் விற்பனை செய்யப்படுகிறது.

மருந்துச் சீட்டுகள் இல்லாமல், காலாவதியான, மருத்துவர் பரிந்துரைக் கப்படாத மருந்துகள் விற்பனை செய்வதாகவும் இது பொதுமக்கள் உடல் நலத்தை பாதிக்கும் என்றும் மருந்து விற்பனையாளர்கள்

# மருந்துகள் விற்பனைக்குத் தடை!



தொடர்ந்த வழக்கில் ஆன்லைன் மூலம் மருந்து விற்பனை செய்ய உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

ஆன்லைன் மூலம் பொருட்களை அலைச்சல் இல்லாமல் வீட்டிலிருந்தே வாங்கலாம் என பொதுமக்கள் கருதுவதால் ஆன்லைன் மூலம் பரிவர்த்தனை அதிகம் நடக்கத் தொடங்கி உள்ளது.

இதில் பட்டாசு போன்ற பொருட்கள் வெடிமருந்து சட்டத்தை மீறி ஆன்லைனில் விற்பனை செய்யப்படுவதால் ஆபத்து விளையும் என வழக்கு தொடரப்பட்டு ஆன்லைனில் பட்டாசு விற்பனைக்கு இடைக்காலத் தடை விதிக்கபட்டு நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு மருத்து வணிகர்கள் சங்கம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதில் பதிவு செய்யப்படாத கடைகள் மூலம் ஆன்லைனில் மருந்து விற்பனை செய்யப்படுவதாகவும், இதனால் பொதுமக்களுக்கு காலாவதியான, தவறான, பரிந்துரைக்கப்படாத மருந்துகள் கிடைக்க வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்தனர்.

மருந்துப் பொருட்கள் உயிர்காக்கும் ஒன்று இதை மருத்துவரின் பரிந்துரையின்றி ஆன்லைன் மூலம் விற்பனை செய்வது ஆபத்து. இது பொதுமக்கள் உயிருக்கு அபாயகரமானது. இவ்வாறு விற்பனை செய்வது சட்ட விரோதமானது என்று மனுவில் கூறியிருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி மகாதேவன் முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி ஆன்லைன் மூலம் மருந்து விற்பதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்.



**P. முருகேசன்**
தொகுப்பு இணை ஆசிரியர்

# அதிகரிக்கும் மர்மக் காய்ச்சல்?!



தமிழகம் முழுவதும் பன்றிக் காய்ச் சல், டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. நேற்று ஒரேநாளில் மட்டும் 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் அரசு மருத்துவமனைகளில் நூற்றுக்கணக்கானோர் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் ஒரே நாளில் கர்ப்பிணி உட்பட 8 பேர் மரணம்; அரசு மருத்துவமனைகளில் நூற்றுக்கணக்கானோருக்கு சிகிச்சை

வேலூர் மாவட்டம் பேரணாம் பட்டு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட் பட்ட வீராங்குப்பம் ஊராட்சி ஓம் சக்தி நகரைச் சேர்ந்தவர் குண சேகரன் (32). இவரது மனைவி வினோதினி (25). இவர்களுக்கு பிரனீஷ் (2)என்ற மகன் உள்ளார். வினோதினி தற்போது 7-மாத கர்ப்பிணியாக இருந்தார்.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக வினோதினி காய்ச் சலால் பாதிக்கப்பட்டு ஆம்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார். அங்கு பரிசோதனை செய்ததில், அவருக்கு பன்றிக் காய்ச்சல் இருப்பது கண்டறியப் பட்டது. இதையடுத்து, அவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி நேற்று பிற்பகல் வினோ தினி உயிரிழந்தார். அவரது வயிற்றில் இருந்த சிசுவும் உயிரிழந்தது.

அதேபோல், ஆம்பூர் அடுத்த பெரியாங்குப்பம் பகுதியைச் சேர்ந் தவர் நெசவுத்தொழிலாளி வரதராஜ் (62). இவரது மனைவி ருக்குமணி (57). இவர், கடந்த சில நாட்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மேல் விஷாரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அங்கு பரிசோதனை யில், அவருக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பது தெரியவந்தது. இதை யடுத்து, வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார். அங்கு, தீவிர சிகிச்சை பலனின்றி நேற்று ருக்குமணி உயிரிழந்தார்.

மதுரை அரசு மருத்துவ மனையில் சிகிச்சையில் இருந்த ராம நாதபுரம் மாவட்டம் கமுதியைச் சேர்ந்த மூக்கம்மாள் (55), மதுரை வில்லாபுரம் மீனாட்சி நகரைச் சேர்ந்த சரவணன் (32) ஆகியோர் ஒரே நாளில் காய்ச்சலுக்கு இறந்துள் ளனர். பன்றிக் காய்ச்சல், டெங்கு காய்ச்சலால் அவர்கள் இறக்க வில்லை என்று மருத்துவமனை நிர்வாகம் கூறினாலும், மதுரையில் தொடர்ந்து காய்ச்சல் மரணங்கள் அதிகரித்து வருவதால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

அரசு மருத்துவமனையில் மட் டும் 125 பேர் காய்ச்சலுக்கு உள் நோயாளிகளாக சிகிச்சை பெறுகின்றனர். இவர்கள் தவிர அரசு மருத்துவமனைகளில் காய்ச்சல் நோயாளிகள் கூட்டம் அலைமோது கிறது.

சேலத்தை அடுத்த மகுடஞ் சாவடி தப்பக்குட்டை கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவரின் மனைவி சுகன்யா (20). இவர்களுக்கு கடந்த ஆண்டு திருமணம் நடந்தது. 8 மாத கர்ப்பிணியாக இருந்த சுகன்யா, சில நாட்களுக்கு முன்பு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

மீண்டும் காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் மகுடஞ்சாவடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு



மருத்துவமனைக்கு உறவினர்கள் அழைத்துச் சென்றனர். அப்போது வழியிலேயே சுகன்யா உயிரிழந்தார்.

இதுகுறித்து மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் பூங் கொடி கூறும்போது, “காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சுகன்யாவுக்கு வெவ்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்துள்ளனர். இதனால், அவருக்கு தொடர் சிகிச்சை கிடைக்கவில்லை. அவரது ரத்தத்தில் ஆக்சிஜன் அளவு 55 சதவீதமாக குறைந்திருந்தது தெரிந்தது. அவருக்கு நிமோனியா காய்ச்சல் இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது” என்றார்.

இதனிடையே, வாழப்பாடியை அடுத்த பேளூரைச் சேர்ந்த கோவிந்தராஜ், ஜெயந்தி தம்பதியின் மகன் சத்ரியன்(11), அரசுப் பள்ளியில் 6-ம் வகுப்பு படித்து வந்தார். சில நாட்களுக்கு முன்னர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உள் ளூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றநிலையில் நேற்று அதிகாலை அவருக்கு காய்ச்சல் அதிகரித்தது.

வாழப்பாடியில் உள்ள தனியார் மருத்துவ மனையில் அவருக்கு பன்றிக் காய்ச்சல் அறிகுறி இருப்பது தெரிந்ததால், சேலம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார். ஆனால், வழியில் சத்ரியன் உயிரிழந்தார். சேலம் அரசு மருத்துவ மனையில் கல்லூரி மாணவன், முதியவர், பெண் உள்பட 4 பேர் பன்றிக் காய்ச்சலுக்கும், ஒருவர் டெங்கு காய்ச்சலுக்கும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் தெங்கம்புதூர் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் ரவிச்சந்திரன் (52), பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் 7 நாட்களாக சிகிச்சை பெற்று வநதார். கடந்த 24-ம் தேதி ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அதிகாலை 5 மணிக்கு உயிரிழந்தார். மாவட்டம் முழுவதும் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 29 பேரில் 15 பேர் சிகிச்சைக்கு பிறகு பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 11 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நெல்லையில் அரசு மருத்துவக் கல்லூரியில் பன்றிக்காய்ச்சல் அறி குறியுடன் 7 பேர், டெங்கு அறிகுறி யுடன் 2 பேர் அனுமதிக்கப்பட்டுள் ளனர். தூத்துக்குடியில் பன்றிக் காய்ச்சல் மற்றும் டெங்கு அறி குறியுடன் தலா 5 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டெங்கு பாதிப் புடன் 3 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். பன்றிக்காய்ச்சல் பாதிப்பு சந்தேகத்தில் அனுமதிக்கப் பட்டுள்ள 3 பேரின் ரத்த மாதிரி பரிசோதனைக்காக அனுப்பப்பட் டுள்ளது. புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 160 பேர் உள்நோயாளி களாக உள்ளனர். அவர்களில் 3 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவக் கல்லூரி முதல்வர் சாரதா தெரிவித்தார்.

கோவை அரசு மருத்துவ மனையில் வைரஸ் காய்ச்சல் காரண மாக மொத்தம் 57 பேர் அனுமதிக்கப் பட்டுள்ளனர். பன்றிக் காய்ச்சலுக்கு 8 பேரும், டெங்கு காய்ச்சலுக்கு 5 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், பொள்ளாச்சியை அடுத்த சமத்தூரைச் சேர்ந்த நாகராஜ்-ரத்தினம் தம்பதியின் மகன் சஞ்சய் (8), காய்ச்சல் பாதிப்பு காரணமாக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதித்திருந்தனர். அவருக்கு பன்றிக் காய்ச்சல் இருப்பது உறுதிசெய்யப்படு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந் நிலையில், சிகிச்சை பலனின்றி சிறுவன் சஞ்சய் உயிரிழந்தான்.



**K. ராஜாராம்குமார்**
கௌரவ செய்தி ஆசிரியர்



# பேரழிவை நோக்கும் பருவநிலை!

2015-இல் பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தின்போது நிர்ணயிக்கப்பட்ட தட்பவெப்பநிலை அளவும்கூடப் போதுமானதல்ல என்கிற நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. 1850 முதல் 1900 ஆண்டு வரையிலான இயந்திரப் புரட்சிக் காலத்துக்கு முற்பட்ட அளவைவிட, இரண்டு டிகிரி செல்சியஸ் அதிகமான அளவுக்கு உலகின் சராசரி வெப்பநிலையை இலக்காக்கி இருந்தது பாரீஸ் ஒப்பந்தம். இப்போது ஏற்கெனவே 150 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலையைவிட, உலகம் ஒரு டிகிரி செல்சியஸ் அதிகமான வெப்பம் அடைந்திருக்கிறது. இன்னும் 0.5 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரித்தால், வறட்சியும் வெள்ளப்பெருக்கும் புயலும் கடல் அமிலமயமாதலும் மேலும் அதிகரிக்கக்கூடும்.

பருவநிலை மாற்றம் குறித்த சர்வதேசக் குழுவான ஐபிசிசி அறிக்கை சில அதிர்ச்சியளிக்கும் உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறது. அந்த அறிக்கையின்படி, பாரீஸ் ஒப்பந்த இலக்கு, புவி வெப்பமயமாதல் பிரச்னையை எதிர்கொள்ளப் போதுமானதல்ல. குறைவான அளவு கரியமில வாயு வெளியேற்றும் தொழில்நுட்பத்தை அதிகப்படுத்துவதும், எரிசக்தியின் தேவையைக் கட்டுப்படுத்துவதும் உடனடி அவசியம் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

ஏற்கெனவே பருவநிலை மாற்றத்தால் மனித இனமும் சூழலியலும் உயிரினங்களின் வாழ்வியலும் உலகளாவிய அளவில் பாதிப்பை எதிர்கொள்கின்றன. உலக சராசரியைவிட வேகமாகவும் அதிகமாகவும் சில பகுதிகள் வெப்பமடைகின்றன.

குறிப்பாக, நகரங்கள் அதிகரித்த வெப்பத்தை உணர்கின்றன. இந்த நிலையில் உலகம் 0.5 டிகிரி செல்சியஸ் அதிகமாக வெப்பமடைந்தாலும் அது பலமடங்கு பாதிப்பை ஏற்படுத்தும். சிறிய தீவுகள், பெரிய நகரங்கள், கடற்கரைப் பகுதிகள், மலைப் பிரதேசங்கள் ஆகியவை பருவநிலை மாற்றத்தால் அதிகமாக பாதிக்கப்படக்கூடிய பகுதிகள். இவையெல்லாமே இந்தியாவில் காணப்படுவதால், ஏனைய நாடுகளைவிட இந்தியா மிக அதிகமான பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதில், அடுத்த 10 ஆண்டுகள் மிகவும் முக்கியமானவை. எல்லாப் பொருளாதாரத் துறைகளும், நாடுகளும், தனி மனிதர்களும் இதுகுறித்த விழிப்புணர்வுடன் ஒன்றுபட்டு செயல்பட்டால் மட்டுமே பேரழிவிலிருந்து உலகத்தை நாம் காப்பாற்ற முடியும்.

2030-க்குள் கரியமில வாயு வெளியேற்றம் கணிசமாகக் குறைக்கப்பட்டாக வேண்டும். அதுமட்டுமல்லாமல், வாயு மண்டலத்தில் இருக்கும் கரியமில வாயு பெருமளவு அகற்றப்பட வேண்டும். அடுத்த 20 ஆண்டுகளில் இந்த முயற்சியில் வெற்றிபெற வேண்டுமானால், மிகப்பெரிய அளவில் மரங்கள் நடப்பட்டும், வாயு மண்டலத்தில் இருக்கும்

கரியமில வாயு அகற்றப்பட்டும் அந்த இலக்கை எட்டியாக வேண்டும்.

இப்போதிருக்கும் நிலை தொடருமானால், 2100-க்குள் உலக வெப்பநிலை 3 முதல் 4 டிகிரி செல்சியஸாக அதிகரிக்கக்கூடும். அதன் விளைவாக கடற்கரைப் பகுதிகள் மிக அதிகமான பாதிப்பை அடையும். கடல் நீர் மட்டம் அதிகரித்து, பூமியில் நில அரிப்பு மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தும். உலக வெப்பம் 3 டிகிரி செல்சியஸ் அதிகரித்தால் மாலத் தீவு போன்ற பல தீவுகள் கடலில் மூழ்கிவிடும். உலகிலுள்ள பல பூச்சியினங்களும் தாவரங்களும் காணாமல் போகக்கூடும்.



இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் ஏற்கெனவே பருவநிலை மாற்றத்தின் பாதிப்புகளை எதிர்கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. கடல் நீர் மட்டம் அதிகரிப்பால் சீனா, வங்கதேசம், எகிப்து, இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், பிலிப்பின்ஸ், அமெரிக்கா, வியத்நாம் ஆகிய நாடுகளில் உள்ள 5 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதன் இன்னொரு விளைவாக ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்கக் கண்டங்களில் மலேரியா காய்ச்சல் அதிகரித்து வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும். வெப்பமய அதிகரிப்பின் பாதிப்புகள் ஆப்பிரிக்க, மேற்கு - கிழக்கு ஆசிய நாடுகளைக் கடுமையாகத் தாக்க இருக்கின்றன. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் வாயு மண்டலத்தில் அதிகமான கரியமில வாயுவை ஏற்படுத்தும் நாடுகளை மட்டுமல்லாமல், உலகிலுள்ள எல்லா நாடுகளையும், அனைத்து உயிரினங்களையும் பாதிக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது. வளர்ச்சியடையும் நாடுகள் தங்களது அனல் மின் நிலையங்களையும், சுத்திகரிப்பு நிலையங்களையும் அகற்றி மாற்று எரிசக்தியை உருவாக்கும் முயற்சிக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் உதவினாலொழிய வாயு மண்டலத்தில் கரியமில வாயுவின் அளவைக் குறைப்பது சாத்தியமல்ல.

வளர்ச்சியடைந்த நாடுகள், 2020 வரை இதற்காக ஆண்டுதோறும் 100 பில்லியன் டாலர் ஒதுக்குவதாக 2017-இல் அளித்த வாக்குறுதியில் 10 சதவீதம்கூட நிறைவேற்றவில்லை. அமெரிக்கா மட்டுமல்லாமல் ஆஸ்திரேலியா, பிரேஸில் உள்ளிட்ட நாடுகளும் பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து விலக முற்பட்டிருக்கின்றன.

2016 முதல் 2035 வரை ஆண்டுதோறும் 2.4 டிரில்லியன் டாலர் எரிசக்தித் துறையில் மாற்றம் ஏற்படுத்த வளர்ச்சி அடையும் நாடுகள் ஒதுக்கினால் மட்டுமே, அதிகரித்து வரும் வெப்பமயமாதலைத் தடுக்க முடியும். ஏற்கெனவே காலம் கடந்துவிட்டிருக்கிறது. இனியும் மெத்தனமாக இருந்தால், நாடு, மதம், இனம், மொழி, உயிரின வேறுபாடு என்பதையெல்லாம் கடந்து, பேரழிவை நோக்கிய உலகின் நகர்வை யாராலும் தடுக்க முடியாத பேராபத்து காத்திருக்கிறது.

பருவநிலை மாற்றம் என்கிற பேராபத்தை உலகம் எதிர்கொள்கிறது. 2052-க்குப் பிறகு, உலக வெப்பநிலையில் 0.5 டிகிரி செல்சியஸ் அதிகரித்தாலும்கூட அதன் விளைவு பேரழிவை நோக்கி இட்டுச்செல்லும் அபாயம் காத்திருக்கிறது. அனல் காற்று, கடுமையான மழை, பெரும் வறட்சி, வெள்ளப்பெருக்கு என்று பல்வேறு இயற்கைப் பேரிடர்களை உலகம் சந்திக்க நேரிடும்.



**M. இளவரசன்**
நிருபர்



# தயங்குவது ஏன்?

ரபேல் போர் விமான கொள்முதல் ஒப்பந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இந்திய விமானப்படையை மேம்படுத்த காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பிரான்ஸ் நாட்டில் இருந்து 126 ரபேல் விமானங்கள் வாங்க முடிவு எடுக்கப்பட்டது. ஒரு விமானம் ரூ.526 கோடிக்கு 2007ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

2016ல் அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு பிரதமர் மோடி நேரடியாக பிரான்ஸ் சென்று 36 விமானங்கள் வாங்க 58 ஆயிரம் கோடிக்கு புதிய ஒப்பந்தம் செய்தார். அந்த ஒப்பந்தத்தில் ஒரு விமானத்தின் விலை ரூ.1600 கோடி. அதாவது 3 மடங்கு அதிகம் விலை. இது காங்கிரஸ் முன்வைக்கும் குற்றச்சாட்டு.

அதே போல் ரபேல் விமானங்களை தயாரிக்கும் பொறுப்பு பொதுத்துறையை சேர்ந்த இந்துஸ்தான் ஏரோநெட்டிக்ஸ் நிறுவனத்திற்கு வழங்காமல் விமான தயாரிப்பில் எந்த அனுபவமும் இல்லாத அனில் அம்பானி நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.


இந்த இரண்டு குற்றச்சாட்டு குறித்தும் மத்திய அரசு தெளிவான பதில் அளிக்க மறுக்கிறது. ஒரு விமானத்தின் விலை ஏன் 3 மடங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கேட்டால் தேச பாதுகாப்பு என்கிறது.

ஒருவிமானம் கூட தயாரிக்காத அனில் அம்பானி நிறுவனத்திற்கு ஏன் ஒப்பந்தம் என்று கேட்டால் அவர்கள் தரமாக தயாரித்து தருவார்கள் என்று பதில் சொல்கிறது. இந்த ஒப்பந்தத்தில் எழுப்பப்படும் குற்றச் சாட்டு குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கும் உத்தரவிட மத்திய அரசு தயங்குகிறது. நீங்கள் நிர்ணயித்த விலையை விட 9 சதவீதம் குறைவாகத்தான் விலை நிர்ணயித்து உள்ளோம் என்று பொத்தாம் பொதுவாக ஒரு பதில் வருகிறது. அப்படி என்றால் 2002 கணக்கெடுப்பின்படி நமது விமானப்படைக்கு 126 விமானங்கள் தேவை. இப்போது எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

குறைவான விலை நிர்ணயம் செய்தால் ஏன் 36 விமானங்கள் வாங்குகிறீர்கள். 126 விமானங்களையும் வாங்க வேண்டியது தானே என்று கேட்டால் அதற்கும் எந்த பதிலும் இல்லை. வேறு வழியின்றி இப்போது பிரச்னை மத்திய கணக்கு தணிக்கை ஆணையம் முன் சென்று இருக்கிறது.

அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் ஆண்டு. அப்போது ரபேல் ஒப்பந்தம் தொடர்பாக இன்னும் பல உண்மைகள் வெளிவரக்கூடும். அது மோடி அரசுக்கு நிச்சயம் நெருக்கடி கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

எனவே ரபேல் ஒப்பந்தத்தில் நடந்த உண்மை நிலவரத்தை வெளிப்படையாக நாட்டு மக்களிடம் தெரிவிக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. ஏனெனில் பிரதமர் மோடி மீது நேரடியாக ஊழல் குற்றச்சாட்டு கூறும்போது அதை தெளிவுபடுத்தாமல் இன்னும் மூடிமறைப்பது, தயங்குவது ஆபத்தாக கூட முடியும்.



**S.A. செய்யது முஹைதீன் ஆலிம்சாகிப்**
*செய்தி இணை ஆசிரியர்*

Owned and Published by **M. ABDUL RAHMAN** from # 61, venkata Mesthiri Street, Mannadi, Chennai - 600 001. and Printed **S. ALI MOHAMED SAYEED** by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai - 600014. Editor : **S. LOGANAYAGI**



# வாழ்த்த வாருங்கள்...



மணநாள் :

**14-11-2018 புதன்கிழமை**

நேரம் :

**காலை 10.30-க்குமேல் 11.30 மணிக்குள்**

இடம் : **பவ்டா திருமண மஹால்** வெட்டுணிமடம்

மணமக்கள்

**C.J. சுதர்மன்** B.A.,B.L.,PGDI&CL.,ML

(Advocate & Commissioner of Oaths)

சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின்

சர்வதேச பொதுச்செயலாளர்

**M. சரண்யா** RNRM., B.Sc., Nursing

(Ramachandra Hospital, Porur, Chennai)



எஸ்.ஏ.செய்யது முஹைதீன் ஆலிம்சாகிப்
தேசிய துணை ஒருங்கிணைப்பாளர்

மனம்போல மாங்கல்யம்... மன்றத்தில் வாழ்த்துகள்...

மழைபோல் பொழிய வாழ்த்தும் அன்பு நெஞ்சங்கள்...



எஸ்.காசிம் முகமது
மாநில பொதுச் செயலாளர்



கே.ராக்கிமுத்து
மாநில பொருளாளர்



எம்.அகில்
மாநில அமைப்பாளர்



ஏ.அருண்குமார்
மாநில துணைச் செயலாளர்



எம்.இளவரசன் பெரம்பலூர்
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்



ஆர்.பொன்னுசாமி பெரம்பலூர்
மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்



டி.சுதாகர்
வெப்பந்தட்டை
ஒன்றிய தலைவர்



எம்.ஆனந்தி கிருஷ்ணகிரி
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்



டி.ஜி.தினகரன் கிருஷ்ணகிரி
மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்



பி.முருகேசன் கன்னியாகுமரி
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்



ஆர்.அகிலேஷ் நீலகிரி
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்



எஸ்.அருண்செலின்மேரி
ராமநாதபுரம் மாவட்ட
ஒருங்கிணைப்பாளர்

**சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்**

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15, 2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis. 481/17



# வாழ்த்த வாருங்கள்...



மணநாள் :

**14-11-2018 புதன்கிழமை**

நேரம் :

**காலை 10.30-க்குமேல் 11.30 மணிக்குள்**

இடம் : **பவ்டா திருமண மஹால்** வெட்டுணிமடம்

மணமக்கள்

**C.J. சுதர்மன்** B.A.,B.L.,PGDI&CL.,ML

(Advocate & Commissioner of Oaths)

சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின்
சர்வதேச பொதுச்செயலாளர்

**M. சரண்யா** RNRM., B.Sc., Nursing

(Ramachandra Hospital, Porur, Chennai)



**S. லோகநாயகி**
சர்வதேச தலைவர்
சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்

மனம்போல மாங்கல்யம்... மன்றத்தில் வாழ்த்துகள்...
மழைபோல் பொழிய வாழ்த்தும் அன்பு நெஞ்சங்கள்...



Dr. S. ஆயிஷா
சர்வதேச துணைத் தலைவர்



என்.அன்பழகன்
சர்வதேச இயக்குநர்



எம்.ராமச்சந்திரன்
சர்வதேச பொருளாளர்



ஜி.வெங்கடேசன்
தேசிய தலைவர்



எஸ்.கலைவாணி
தேசிய பொதுச் செயலாளர்



ஆர்.சரவணன்
தேசிய இயக்குநர்



சி.பெருமாள்
தேசிய துணைத் தலைவர்



ஏ.ஆர்.ஆர்.கௌதம் கிருஷ்ணா
தேசிய ஒருங்கிணைப்பாளர்



கே.மதுசூதன்
மாநில தலைவர்



ஏ.பிரபாகரன்
தேசிய அமைப்பாளர்



எம்.தனராஜ்
தேசிய ஆலோசகர்



எஸ்.ரமேஷ்
தேசிய கொள்கைப் பரப்பு செயலாளர்

**சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்**